தஞ்சை ப்ரகாஷ்

கவிதைகள்

என்றோ எழுதிய கனவு

என்றோ
எழுதிய
கனவு

தஞ்சை ப்ரகாஷ்

கவிதைகள்

நந்தி பதிப்பகம்
62, பொன்னம்மாள் இல்லம்
ராஜராஜன் நகர்
மாரியம்மன்கோவில்
தஞ்சாவூர் - 613 501

என்றோ எழுதிய கனவு
© தஞ்சை ப்ரகாஷ்

முதற் பதிப்பு	:	டிசம்பர் 2010
வெளியீடு	:	நந்தி பதிப்பகம், 62, பொன்னம்மாள் இல்லம், ராஜராஜன் நகர், மாரியம்மன்கோவில், தஞ்சாவூர்.
ஒளி அச்சு & அச்சாக்கம்	:	அருள் ஆப்செட் தஞ்சாவூர்-613 005. தொலைபேசி : 04362-236594
நூல் அளவு	:	டெம்மி
தாள் வகை	:	NS Maplitho
பக்கங்கள்	:	141
விலை	:	ரூ. 60/-

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Endro Eludeya Kanavu
Subject	:	Poetry
Author	:	Thanjai Prakash
Language	:	Tamil
Edition	:	1st Edition Dec.2010
Size of the Book	:	Demy
Paper	:	NS Maplitho
Number of Pages	:	141
Number of Copies	:	1100
Publishers	:	Nandhi Pathippakam, 62, Ponnammal Illam, Rajarajan Nagar, Mariyammankovil, Thanajvur.
Laser Type setting & Printing	:	Arul Offset, Thanjavur.
Price	:	Rs. 60/-

என்றோ எழுதிய கனவு

தஞ்சை ப்ரகாஷ் (1933 - 2000)

கார்டன் மார்க்ஸ் லயனல் ப்ரகாஷ், ஜி.எம்.எல்.ப்ரகாஷ் எனும் தஞ்சை ப்ரகாஷின் பூர்வீகம், திருக்காட்டுப்பள்ளி அருகேயுள்ள உஞ்ஜினி எனும் காவிரிக்கரை கிராமம்.

தந்தை : எட்வர்டு கார்டன்
தாயார் : க்ரேஷ் கார்டன்
மனைவி : திருமதி.மங்கையற்கரசி

கொடைக்கானலில் ஆரம்பக்கல்வி கற்ற தஞ்சை ப்ரகாஷ் இந்தி எதிர்ப்பினால் பி.யூ.சி படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு தமிழ் பண்டிட்டாகத் தேர்ச்சி பெற்றார். ஆங்கிலம், சம்ஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், வங்கம், மராட்டி, கன்னடம், உருது, ப்ரெஞ்ச் மற்றும் ஜெர்மன் மொழிகளிலும் புலமை பெற்றவரானார்.

தென்னக இரயில்வேயில் பணியாற்றிய ப்ரகாஷ் சில ஆண்டுகளில் அதை ராஜினாமா செய்துவிட்டு, பி.கே.புக்ஸ் எனும் பதிப்பகத்தைத் தொடங்கினார். அதனைத் தொடர்ந்து பெரியநாயகி அச்சகம், பாலம், வைகை போன்ற இலக்கிய இதழ்கள், யுவர் மெஸ், ஜி.எம்.எல். ஸ்கிரீன் பிரஸ் என கடந்து இறுதியில் தஞ்சை கீழராஜவீதியில் ரப்பர் ஸ்டாம்ப், பிளாக் மேக்கிங்குடன் சேர்ந்த அச்சகத்தையும் தொடர்ந்து நடத்தி வந்தார்.

ந.பிச்சமூர்த்தி, க.நா.சு., கு.ப.ரா., கரிச்சான் குஞ்சு, எம்.வி.வெங்கட்ராம், வெங்கட்சாமிநாதன், கே.டேனியல் போன்றவர்களுடன் மிக நெருக்கமானவராக இருந்த ப்ரகாஷ், கி.ராஜநாராயணன், வல்லிக்கண்ணன், வண்ணநிலவன், பிரபஞ்சன், மாலன், சி.எம்.முத்து, நா.விச்வநாதன், தஞ்சாவூர் கவிராயர், தேனுகா, க்ருஷாங்கினி போன்றவர்களுக்கு மிக நெருங்கிய தோழராகவும், சுந்தர்ஜி, செழியன், செல்லத்துரை, விஜயராகவன், புத்தகன், கவிஜீவன், ஸ்ரீமொழி வெங்கடேஷ், விஜயகுமார், ரவி, வெற்றிப்பேரொளி, மணிமுடி, சாலி.சபா, சுகன், வியாகுலன், ஹரணி, ஜாகீர் ராஜா, இலக்குமி குமாரன், ஞானதிரவியம், யுகபாரதி, இரா.இளங்கோ, நட்சத்ரன், குப்புவீரமணி, ஜோதி என மூன்றாம் தலைமுறை வரை நீண்ட நட்பு வட்டம் உடையவராகவும் இருந்தார்.

பாலம், வைகை, குயுக்தம், சாளரம், தஞ்சை முரசு, வெ.சா.எ. என்பன அவர் நடத்திய இலக்கிய இதழ்கள்.

பி.கே.புக்ஸ், ப்ரகாஷ் வெளியீடு ஆகிய அவரது பதிப்பகத்தின் மூலம் கி.ராஜநாராயணன், அம்பை, கே.டேனியல், க.நா.சு. உள்ளிட்ட படைப்பாளிகளுடைய இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார்.

ஏராளமான இலக்கிய ஆளுமைகளை தஞ்சைக்கு அழைத்துவந்து நூற்றுக்கணக்கான இலக்கிய கூட்டங்களை நடத்திய அவரது இலக்கிய அமைப்புகள் ஒளிவட்டம், சும்மா இலக்கியக்கும்பல், கதைசொல்லிகள், தளி ஆகியன.

இதுவரை வெளியாகியுள்ள தஞ்சை ப்ரகாஷின் படைப்புகள் :

1. கள்ளம் - நாவல்
2. கரமுண்டார் வூடு - நாவல் - சிவசக்தி, நந்தி
3. மீனின் சிறகுகள் - நாவல் - காவ்யா
4. மேபல் - சிறுகதைத்தொகுதி - அனன்யா
5. மிஷன்தெரு - நாவல் - அனன்யா
6. நாட்டுப்புறக்கதைகள் - காவ்யா
7. தஞ்சை ப்ரகாஷ் கட்டுரைகள் - காவ்யா

8. என்றோ எழுதிய கனவு - கவிதைகள் - நந்தி
9. பள்ளியறை கதைகள் - அச்சில்
10. கில்கா மெஷ்ஷீம் மரக்குதிரையும்
- மொழிபெயர்ப்பு - அச்சில்

இன்றளவும் நிறைய எதிர்ப்புகளையும், விமர்சனங்களையும் எதிர் கொள்ளும் ப்ரகாஷின் படைப்புகள் கதா விருது, குமாரன் ஆசான் விருது (மலையாளத்திலிருந்து) ஆகிய விருதுகளைப் பெற்றிருக்கின்றன.

மனம்
ஒரு மறு
கடலல்ல

ஞானம்
ஒரு இருட்டு
வெளிச்சமல்ல

- தஞ்சை ப்ரகாஷ்

வீடு திரும்புகிறார் ப்ரகாஷ்

மனிதர்கள் ஜனிக்கும் நேரத்தை விடவும் உன்னதமானவை கவிதைகள் பிறக்கும் நேரம். சமயங்களில் கலைஞனின் வாழ்வை விடவும் சவாலானதாக இருக்கிறது படைப்புகளின் வாழ்வு.

வாள்முனைகளையும், மலர்க்கொத்துகளையும் எதிர்கொண்டு, ஊழிக்காலம்வரை கலைஞனை சுமந்து செல்லும் இந்த நோவாவின் பேழையை, ஒரு பொருளாக அதன் அழிவிலிருந்து மீட்பது என்பது எத்தனை மகிழ்ச்சியான தருணம்.

பசித்தலைந்த கண்களுக்கு புதரிடையே தென்பட்ட காட்டுப்பறவையின் முட்டைகளென அகப்பட்டன ப்ரகாஷின் கவிதைகள். காலத்தின் விளிம்பிலிருந்த அதன் பிரதிகள் மலைச்சரிவிலிருந்து மீட்கப்பட்ட ஆட்டுக்குட்டிகளென திரும்புகின்றன.

முதன் முறையாக ப்ரகாஷின் கவிதைகள் அனைத்தும் ஒரு நூலாக வடிவம் பெற்றிருப்பதில் உள்ள அத்தனை பெருமைகளும் திருமதி.மங்கையர்கரசி ப்ரகாஷ் அவர்களையே சாரும்.

எழுத்துக்கள் மங்கி ஏடுஏடாக பொறிந்து போகிற நிலையிலும் அவற்றை பொத்தி பாதுகாத்து வைத்திருந்து ப்ரகாஷின் கனவுகளுக்கு உயிரூட்டியவர் அவர்தான்.

அறுபதுகளிலிருந்தே, நாவல், சிறுகதை, கட்டுரைகளோடு ப்ரகாஷ் கவிதைகளையும் எழுதி வந்திருக்கிறார். இன்னும் சொல்லப்போனால் கவிஞராகத்தான் அவரது இலக்கியப் பயணம் தொடங்கியிருக்கக் கூடும்.

ப்ரகாஷை ஒரு கவிஞராக அவரது சினேகிதர்களும் முத்த படைப்பாளிகளும் அறிந்திருந்தாலும் ப்ரகாஷின் கவி வண்ணத்தை இளைய தலை முறையினரின் முன் வைப்பதே நம்முடைய நோக்கம்.

கவிதைகளில் ப்ரகாஷுக்கும் நூல்களில் நந்திக்கும் இது முதல் வெளியீடு. தர்பை சிசுவல்ல என காலப்பூக்குழிச் சாடும் இப்படைப்பு ப்ரகாஷ் என்கிற ஆளுமை குறித்த அனுமானங்கள், யூகங்கள், கற்பனைகள், புதிர்கள் அத்தனைக்குமான ஒரே பதிலாக அமையும் என்று நம்புகிறேன்.

கிட்டத்தட்ட அவருடைய நாற்பதாண்டு காலத்து கவிதைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டிருந்தாலும் விடுபட்ட கவிதைகள் யாரிடமேனும் கைவசமிருந்தால் அதை அடுத்த பதிப்பிற்கு தந்து உதவவோ அல்லது தனியொரு தொகுப்பாக கொணர்ந்தாலோ எல்லோருக்கும் மகிழ்ச்சி.

வெவ்வேறு காலக்கட்டங்களில் இக்கவிதைகளை வெளியிட்ட ஞானரதம், கசடதபற, எழுத்து, பாலம், கணையாழி, தாமரை, இனி, நடுகல், கூடாரம், புதியபாசறை, சுகன், புதியபார்வை, சுபமங்களா, குயுக்தம், திடல், நீலமலை போன்ற இலக்கிய இதழ்களுக்கெல்லாம் ப்ரகாஷின் சார்பில் நன்றி தெரிவிப்பதை பெருமையென கருதுகிறேன். அதுபோலவே சிந்திக்கிடந்த இம்மணிகளை அள்ளிக்கோர்த்த பலருக்கும் நன்றி சொல்லாமல் தீராது.

பிரதிகளை சேகரிப்பதிலிருந்து, நகலெடுப்பது, தொகுப்பது, வரிசையிடுவது, அச்சுப்பிழை திருத்துவது, நூல் வடிவமைப்பது என்று எல்லா நிலைகளிலும் ஆர்வத்தோடு இக்காரியத்தை முன்னெடுத்து சென்றவர்கள் கவிஞர் நா.விச்வநாதனும், கவிஞர்.கவிஜீவனும் தான்.

ப்ரகாஷ் திருமணத்தின் முதல்நாள் மாலையில், மாப்பிள்ளை தோழரில் ஒருவரென குதூகலிந்திருந்திருக்கும் நா.விச்சு ப்ரகாஷுக்கென எப்போதும் வைத்திருக்கும் வாடாத ப்ரியத்திற்கு மனமார்ந்த நன்றி.

ஆசான் ஊட்டிய அறிவுக்கு ஈடாய் தன் வாழ்வின் பெரும்பொழுதை அவருடன் கழித்த கவிஜீவன் இன்னும் பல பொழுதுகளை இதற்கெனவே ஈந்தமைக்காய் நன்றி.

எப்போதும் இந்நூல் குறித்து விசாரித்தும் ஊக்கமளித்தும் வந்த அருமை நண்பர்கள் சுந்தர்ஜி, இரா.செழியன், முத்தமிழ் விரும்பி, இயக்குனர்.சொர்ணவேல், விஜயக்குமார், ஸ்ரீமொழி வெங்கடேஷ், சிவஒளி கா.விஜயராகவன், ரவி ஆகிய அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

ஒரு ஆழக்குளத்தில் என் அடிவயிறு பற்றி நீச்சல் பழக்கும் தோழமையாய் எனை வழி நடத்தும் அனன்யா வியாகுலன் அவர்களுக்கு நன்றி.

சிறு துரும்பேனும் ப்ரகாஷீக்கு திருப்பிச் செலுத்த முடியாதா என ஏங்கிக்கிடந்த எனக்கு, அவர் கவிதைகள் அனைத்தையும் காத்திருந்து, கையளித்த காலத்தின் கனிவுக்கு நன்றி.

ஒரு கலைஞனது வாழ்வின் சாரத்தை ஏந்தியிருக்கும் உங்களுக்கும் நன்றி.

இனி பருகுங்கள். ப்ரகாஷை ருசியுங்கள்.

நேசமுடன்,

நந்தி

என்றோ

எழுதிய

கனவு

நிலை வை!

காலம் கனவேற்றும்
கனவு நிதிசுரக்கும்
நிதியில் எனை மறந்து
தவிக்கின்ற வேளை
தருதற்குப் பணிக்கும்
தாயே!
தவமே!
தீயே!
உருவே!
அருவே!
ரெண்டும்
கலந்த
உயிர்ப்பே!
எனை
நிலை
வை!

●

லிங்கா

மலையடிவாரம்
கோயில்!

கோயிலுக்குள்ள
இருட்டு!

பதினெட்டாம்
படிக்குள்ளே
பள்ளம்

பள்ளத்துல
லிங்கம்

லிங்கத்துக்குள்ள
ஞானம்!

ஞானத்தைப்பிளக்க
ஆவுடையாரும்
நீயும்
நானும்!

●

எல்லாமே வெளிச்சம்

ககனத்தேறும் மேகம்
வியப்பா?

அடுக்கக்காய்ச்
சுருளுது இருள்
கட்டிகட்டியாய்
வானத்தே சாம்பல்!
கரிக்கட்டைக் குழம்பாய்
சுருண்டு கருகுவது
வியப்பல்லால்
வேறென்!

சுருட்டும் நெடுந்திரையன்ன
கனதிகனதியான
கருக்கிருட்டின் கட்டியுருண்டைகள்
தலைக்கு மேலேயுருள
கிழக்கே பறக்குது ஒளியின் சாட்டை!

சொடேரிட்டு கடகட வென்று
சகடம் உருள தீப்பறக்கும்
கொடி விரிந்து பறந்தது வானம்!
விரியும்
வியப்பை
என்னென்று சொல்லிவிடக்
கூடுமோ?

சற்றே கவியும் இருட்டு நிழலாய்
உலகைக் கவிழ்த்து மூட
மழையின் வாசனை மண்ணின்
துளிகளால் எழும்பும்
புழுதித் தேரின் சகடக்கால்
உருட்சி!

நெஞ்சைத் துடிப்பேற்றும் இம்முழக்கம்
யாருக்காக?
எப்போதும் தெரியவில்லை தான்!?

ஒருகணம்தான் இவை!
மேகம் உடைந்து க
ருக்கட்டு நொறுங்கி
காற்று ஊதிச்சொரிய விலகிற்றே
வானம்!
எல்லாமே வெளிச்சம்.

●

கனவுமரம்

என் நெஞ்சில் நிற்குது
கனவு மரம்!
இலையோ பூவோ
இல்லாது வானத்தை முட்டும்
மொட்டை மரம்
நெஞ்செலும்பில் வேர் ஊன்றி
வயிற்றில் கால்பரப்பி
மூளையை உறிஞ்சி
பல்லாண்டாய்
எழும்பிய விருட்சமது!
பசியை உறிஞ்சி
என் வாழ்வதனைத் தின்று
மரவட்டைபோல் புழுத்து
விந்துக்கூட்டத்தை ரத்தமாய்
உறிஞ்சி உறிஞ்சி
உப்பரித்த என்
ஆசைகளை எல்லாம்
பழங்களாய்
உலுப்பி
மிச்சம்
ஏதும் எனக்கென்று
விடாமல்
என்னைத்தின்று
சுத்தமாக்கி
இந்த உலகை
நேர்மையாக்கி
ஒழுங்காகச்சுற்றும்
உலகை
ஓழுங்காய் சுழற்றி
என் எலும்புகளின்
மேலே
என்றும் விழுதூன்றி
நிற்குது
என்
கனவு மரம்!

●

பழுப்பு

நம்
வேர்களைத்தேடித்தேடி
வேர்களே அற்றுவிடுமோ?

மரம்தான் தானே வளைந்து
வேர்களை அகழ்ந்து
மண்பறித்துப்புரட்டி
மண்ணுக்குள்ளே
தேடும்
தேடல்
மனுஷனின் வேர்களோ

மண்ணுக்குள்ளேயில்லை
எல்லாம் தலைகீழ்!

வானத்தில்கொடியோடிப்
பரந்து புதைந்துகிடக்குது
மனுஷனின் வேர்கள்!

வானத்தில் காலூன்றி
தலையால் நடக்கும்
விசித்ரம்
மனுஷனுக்கே வெளிச்சம்

நாளை வேரிலேதான்
பழம் பழுக்கும்
பூமியிலே
உரசிப்பறக்கும்
மூளைகளுக்குப்
பழுப்பே
மிச்சம்

●

வின்னம்

நான் ஒரு அக்காகி அக்காகிவிச்!
தெரியுமா உனக்கு?

அக்காகி அக்காகிவிச் ஒரு ரிக்கார்டு க்ளார்க்!
பதினேழாம் நூற்றாண்டில்
ரஷ்யாவின் ஒரு மூலையில்
ஒரு ஸ்தாபனத்தின்
மூலை ஒட்டை நாற்காலியில் இருந்தபடி
ஓயாது பிரதி செய்பவன்
மேதை கோகலின் அக்காகி அக்காகிவிச்

பேரே கச்சுமுச்சு என்று வாயில் நுழையாத
உக்ரேனியப் பெயரே எனின்
நம்ம சுப்பரமணியன் சப்பரவாயன் பேர்
மட்டும் அவன்வாயில் நுழையுமா?
பெயரில் என்ன?

பிரதி எடுப்பதவன் வேலை!
வாழ்வைப் பிரதி செய்வதென் உயிர்ப்பணி!
நூற்றாண்டுகள் கடந்தும்
நம்மிடையே வாழும் நான்
அக்காகி அக்காகிவிச்தான்!

இருண்ட அலுவலக மூலையில்
அதோ அக்காகி அக்காகிவிச்சாய்
நான்கு நூற்றாண்டுகளுக்கும் முன்னம்
நானே ஓயாது பிரதி எடுத்துக்குவித்தும்
தீராது தீராது இன்று வரை
பிரதி எடுக்கும்பணி!
கவிதையாய்த்தீராது!

அம்மா!
என் அப்பா
என் மனைவி
என் எத்தனைப்பிறப்பிற
பிரதி எடுப்புகள்

என்னைப்பிரதி எடுத்த
அம்மாவுக்கும் அப்பாவுக்கும்
இன்றும் வியக்கும்
பிரதியாய் நான்

வளர்ந்து பெருகி
என் கவிதையில்
நான் என்னையே
அக்காகி அக்காகிவிச்சாய்
உணர்ந்து
எத்தனை அசட்டுத்தனம்
முன்னம் எத்தனை எத்தனை ..
பின்னம் எத்தனை எத்தனை ..
இன்னும் இனியும் எத்தனை எத்தனை..
பிரதிகள்!

இந்த அக்காகி அக்காகிவிச்
மட்டும் ஏனோ
தானே தன் எழுத்தாய்
தலை எழுத்தாய்ப்
பிறக்கவில்லை.

●

நானில்லை!

எனக்கும் காதலித்து
கல்யாணமாகிப் பிள்ளையும்பெற்று
கண்ணியனாகத்தான் ஆசை

கண்ணகியும்
ஹெலனும்
சீதையும்
ஏவாளும்
பொய்யாய் வாழ்ந்து
சிலைகளான பின்
காதல்நாறி
ஆசைகள் குமட்டி
வெறுமையாய்ப்போக
நானில்லை
அவர்களே போதும்

எனக்கும் உண்மையை
எழுதி இலக்கியமாக்கி
சாகாதசரித்திரம் படைக்கவே எண்ணம்

ஹோமரின் இலியட்டும்
வால்மீகியின் ராமாவதாரமும்
இளங்கோவின் சிலம்பும்
பாரதமும் பைபிளும்
கிழித்த கோடுகள்
மனித சரித்திரத்தை
மாற்றவேயில்லை

அதுவும் அவையும்
புத்தகக் கல்லறையாய்
நின்றுவிட்டபோது
நானில்லை
அவைகளே பிணங்கள்!

எனக்கும் ஞானியாய் துறவியாய்
ஞானம் பேசி மோனம் பரப்ப
ஆராத பேராசை என்றுமே உண்டு!
வள்ளுவனும் நபியும்

விச்வாமித்ரனும் அங்கீரசனும்
பரதனும் பதஞ்சலியும்
வள்ளலாரும் நாராயணனும்
அரவிந்தனும் மஹேஸனும்
போன இடம் தெரியவில்லை

பூவுலகில் ஞானியாய்
நானில்லை
அவர்களே ஞானத்தை
ஓட்டட்டும்

எனக்கும்
உலகைத்திருத்தத்தான் ஆசை!

சாக்ரடீசும்
ஏசுவும்
புத்தனும்
மார்க்சும்
ஃப்ராய்டும்
தெய்வங்களானபின்
மலையைப்புரட்டி
எலியைப்பிடித்து
நாறிப்போக
நானில்லை
அவர்களே விளங்கட்டும்

●

இவன்

கவிதை எனக்குக்
கவிதையல்ல!
வாழ்வெனக்கு
வாழ்வதல்ல!
ஓவியம் எனக்கு
விளக்கல்ல!
இசை எனக்கு
இசைவல்ல!
காரணம்
கனவெனக்குக்
கனவல்ல
சிற்பமும்
அறுபத்துநாலு
கலைகளும்
எனக்குக்
கருத்தல்ல!
ஆம்
மொத்தத்தில்
ஒவ்வொன்றும்
வேறுவேறு!

ஒன்றுவிஷம்
என்றால்
மற்றொன்று அமுதம்
இரண்டும் ஒரே
குழியின் ஊத்தை
இரண்டிரண்டாய்
எதிரெதிராய் எங்கும்
இயங்குது எதிர்மாறாய்
எதை ஏற்பது எதை விடுவது!
பின்னிய நாகப்புணையலில்
நஞ்சுகக்கும் கடைசலில்
அள்ளி விழுங்கும் இவன்
நான்!

●

தூசிப்படலம்

கனவு காண்பதென் வாழ்க்கை
வாழ்வதல்ல!

வாழ்வதென் விதி
விதிக்கப்பட்டது
விதியாய் அல்ல!

பிறக்கவில்லை என் வாரிசு!
வேண்டவில்லை என்போல்
இன்னொருவன்!

கனவை
நனவாக்குவதென்
ஸ்ரமம்
ஸ்ரமமேயெல்லாம்
அல்ல!

இருண்டு கிடக்குதென் பாதை..!
பாதையே போகுமெனின்
நானே அதல்ல

ஒளிவேண்டி பறப்பதென் சிறகு!
கண்ணறியாது
என் இருபுறமுமாய்
வீசுது பயனற்று

வானம் எனக்கு மண்!
விளையுது என் உயிர்
பழம் பழுக்கும் நுனியில்!
என் கரங்களே புழுதியில்
ஆம்...!
எனின் புழுதியே நானாய்
மீதியாய் - ஆக...

●

சுயம் நலம்

கனவை
நனவாக்க
இலக்கியம் செய்
என்றான் நண்பன்

என்னை நீயாக்கி
உன்னை நானாக்கி
உள்ளே புகுந்து
குழந்தையாய்ப்பிற
என்றாள் காதலி

எழுதி எடுத்து
திருப்பித்திருத்தி
வடித்தெடுத்துப் படை
என்றான் விமர்சகன்

பசித்ததைப்
பழங்கதையாக்கி
உலகை அழித்து
புதிதாய் நிறுவு
என்றான் என் சமதர்மன்!

கண்டுபிடித்து
அழித்து ஆக்கி
மறுபடியும்
உலகைக் கண்டுபிடி
என்றான் விஞ்ஞானி

தலைக்கு மேலிருந்து
யார்தான் எப்படிப்
புலம்பித் தீர்த்தாலும்
என் சுயநலமும்
இவர்கள் சுயமும்
ஒன்றுதான்!
என்றும்
இரண்டல்ல!

●

சோரம்

எனக்குத் தொழில்
கவிதை
இல்லை
சோரம்!

நாளும் சோரம்
வேறென்ன
வாழும் உலகின்
வசமான
வழிகள்
எனக்கில்லை

கவிதையின்
நுண்ணலை நாதம்
என்நெஞ்சில் இல்லை!

கனவின் ஒளிவீச்சு
எழுத்தில் வரும்
திறமை
எப்போதும் எனக்கு
காததூரம்!

அருளைப் பெற்று
கனவை வெல்லும்
கற்களைவடிக்கும்
சிற்பத்திறம்
எனக்கில்லை

வாழ உழைத்து
உழைத்து
வாழும்
உலகின் நயம்
எனக்கு
எப்போதும்
அற்பம்

என்றாலும்
உலகத்தோடு
ஒட்ட
ஒட்ட
ஒழுகி
நக்கும்
நாயாய்
சுமக்கும்
கழுதையாய்
நாளும்
சோரம்போய்
உடல்விற்றுப்
புழுக்கும்
தெருச் செறுக்கியாய்
இருப்பதில்
எனக்கு வெட்கமில்லை

காரணம்
இன்று
இந்தச்
சமூகத்தில்
எந்தவேலையும்
இந்தத்தரத்தை
மீறாது!
மீளாது!

எனக்குத் தொழில்
ஆம்!
கவிதைச்
சோரம்!

●

இருப்பு

கவிதையில்
என்னால்
பொய் சொல்லமுடியாது!
பொய்யை நான்
கவிதையாய் சொன்னாலும்கூட-!

வாழ்வில் என்னால்
கதை சொல்ல முடியவில்லை
வாழ்வையே எப்போதும் கதையாய்ச்
சொல்லிக்கொண்டிருந்தாலும்கூட.!

கனவில்கூட என்னால்
கனவுகான முடிவதில்லை
கனவையே வாழ்ந்து கொண்டிருக்கும் போதும்கூட!
இசைவில் இசையாகவும் சிற்பத்தில் செதுக்காகவும்
நான் இணைந்தாலும்
அதுவாகச்
சுவையாக
நான் என்றுமே
ஆகமுடியவில்லை என்றாலும்கூட!
நான் என்றும் நானாகவே இருப்பது மட்டும்
மிகவும் கேவலமாய் இருக்கிறது!

நான் நீங்களாக நீங்கள் பலராக
ஊராய் உலகாய் பரந்து விரிந்து கலந்து
அணு அணுவாய் பறந்து திரிய
என்னால் முடியவில்லை என்றாலும்கூட

அணுவுக்கும் பரமணுவுக்கும் சிறியதாய்
நான் கவிதையாய் கனவாய் இசையாய் சிற்பமாய்
என்றென்றைக்குமாய்
இல்லாமல்தான்
இருக்கிறேன்!

●

சருகப்பூ

இந்த நிமிடம்
போதும்!
உனக்குப்போதுமா?
எனக்கிந்தக்கணம்
வாழ்ந்தால்போதும்

மதம்பயமுறுத்தும்
சட்டம் உலைக்கும்
வாழ்வின்
நெறிகள் நெரிக்கும்

நாளை நம்முடையதெனும்
ஊரும் உலகும் கூச்சலிடும்
கட்சிகளும் அரசியலும்
சமுதாய வழக்கச்சழக்குகளும்

விடாமல் துரத்தியடிக்கும்
ஆசைக்கனவுகளும்
நாளை நாளை என்றேங்கும்

துரத்திவரும் மனிதக்கூட்டம்
வழக்கத்தின் பழக்கத்தால்
மெய் மறக்கும் வண்டுகளும்
நாளை கனவின் பொற்சரிகைக்
கிண்ணத்தின் தேனில் விழுந்து
இன்று எனும் நிஜத்தை
மறந்துவிடும் கோரம்
நாளை இன்றாகும்போது
மறுபடியும் நாளை எனும்
சர்க்கரை இனிப்பு மீண்டும்
இருக்கவே இருக்கிறது

இன்று வாழும் நான்
இன்றே வாழ்ந்தாக வேண்டும்

நாளை வேண்டாம்
நாளை என்பது வலை!
வாய்பிளந்து நிற்கும்
ஓநாய்!

இன்றே நமதில்லையெனின்
நாளை எனும் பிசாசு
நமை விழுங்காதா?

மலர்ந்து கிடக்கும் கள்ளிப்பூ
எனினும் அதுவும்
புஷ்பமே!

மலரெல்லாம்
மனிதரெல்லாம்
இன்றே மலர்ந்தாகவேண்டும்
நாளை எனின்
வாடல் கழிவு
சருகப்பூ!
உயிரற்ற
சவம்!

●

சிகரசாகரம்

தொட்டபெட்டாவின்
உயர் உச்சிச்
சிகரத்தில் நிற்கிறேன்!
மறுபடியும்
என்சிகரம் அதற்கு மேலே!

சிவப்புரத்தம் வழிய
கனல் தெறிக்கும் ஞாபகம்!
எங்கும் பனிமூடிய
கூர்மலை உச்சிகள்
உச்சியில் பஞ்சுக்கூட்டம்
படர்ந்திறங்கும் பூமியெங்கும்
காட்டுமரங்களின் தலையசைப்பு

காலமெல்லாம் கருகி
ஏறியும் எட்டமுடியாத
என் சிகரத்து வழுவழுப்பும்.. சரிவும்
பாதாளமும் பாறை வெடிப்பும்
எண்ணத்தில் கருக்கிட்டு
உயரும்!
என்சிகரம் மேலே! மேலே!

அதன்சுருள் பாதைகள் நெளிந்லைந்து
மேலேறும் பயங்கரம்
ஆனால் நீலகிரிச் சிகரமோ
தாழ்ந்து கீழே அமுங்கிப்பனியில்
கீழிறங்கிப் புதைந்து குமையுது!

வாழ்வெங்கும்
படர்ந்துவிட்ட அடர்
முட்புதர்கள்!
கருநீலமாய் அழகுவிரித்த
காலப் புல்வெளி!

ஆசைகளாய் ஒற்றையடிப்
பாதைகளின் பாம்புச் சீறல்கள்!

வெற்றிபோதை ஏற்றியழைக்கும்
சூரியன்கள் புதையும் பள்ளத்தாக்கு!
என் வாழ்வில் மட்டுமல்ல
கண்ணெதிரே விரிந்து கிடக்கும்
நீலமலைக் கூட்டங்களிலும்தான்
ஆயினும் தொட்டபெட்டா
சின்னுஞ்சிறு குன்றுகளின் கூட்டம்தான்!

எல்லாச் சிகரங்களுக்கும்
மேலேறுது!
வளருது வளருது!..
அளக்கவியலா அறிவு!
எட்டமுடியா உயரம்!
அறிந்துவிடக் கூடாத
பேரண்டம்
அது!
சிகரம் மட்டுமல்ல
சாகரம்
ஆழிப்புனல்.

●

ரூபிதயா

கட்டிகட்டியாய்ப்
பூவுதிர்த்தது
என் வெண்நாவல் மரம்!
நானும் கீழே கவியுதிர்த்து
குலவிய காலம் அது!

இப்போது எல்லாரும்
வெண்நாவலா?
அப்டீன்னா என்ன?
என்று வினாவிடும் காலம்

என்தங்கை
செத்துப்போனபோது
வெண்நாவற்பழங்கள்
கசந்தன!

கனவுகளைப்போல் கலைந்த
அவள் உருக்களை
நிகர்த்த வெண்நாவல்
கனியின் கொட்டைகள்
இறைந்தன.

இப்போது வெண்
நாவல் கூட உண்டா?
என்கின்றனர் மனுஷ்யர்கள்
ரூபீ ! நீ எங்கிருக்கிறாய்?

தங்கையின் மடியில்
உறக்கம் கொள்வார்
இன்று யாருளரம்மா?
நீயும் வெண்நாவலும்
இப்போதெல்லாம் இல்லை!
சர்க்கரை வேம்பு உண்டா?
வெள்ளெருக்கு? வால்வெள்ளேறு?
சாதகப்பறவை? வெண்மயில்?
சகோரப்பட்சி? என் தங்கை??
என் உடலிலும் ஆவியிலும் நெஞ்சின்
அனலிலும் நீ மட்டும் தயாரூபீ
நீ மட்டும் இன்னும் எப்படி இருக்கிறாயடி?

●

மருட் பூ

காலம் நேருமுன்
பூத்துவிட்ட
மருட் பூ!

உடலின்றி
உடலுக்குள் பூத்த
உயிர்ப்பூ!

கனவே கனவாய்
கனவில் அழுந்திப்
பெற்றெடுத்த
உடற்பூ!

தங்கமே தங்கமாய்
தகதககாயமாய்
பொற்சுட்டியாய்ப்
படர்ந்த
மனுஷப் பூ

நெஞ்சம்தனில்
நெஞ்சாறி
நெஞ்சிலேபூத்த
நீ!
காலம் நேருமுன்
புத்துவிட்ட
மருட் பூ

●

ககனத்தே

நீ எப்படிப்பார்த்தாலும்
என்னையேதான்
பார்க்கிறாய்

நானோவெனில்
உன்னையல்லாது
வேறெதையும் பார்க்க
முடியாது தவிக்கிறேன்

பொதுவாக நம்
பார்வைகள்
சந்திப்பதேயில்லை
என்றாலும்
நம் பார்வைகள்
ஒருகோடுதான்

என்னில் ஆரம்பித்து
உன்னில் முடியும்
என்று பொருளல்ல
என்னிலும் உன்னிலுமாய்
துவங்கி நீண்டு
போய்க்கொண்டே இருக்கும்
ககனத்தே பறக்கும்
அம்பு.

●

எங்கே

உன்னைத்தேடி நான்
வந்தால்
நீ என்னைத்தேடிப் போனாய்

நாம்
நம்மைத்தேடிக் கொண்டிருந்ததால்
நாம்
ஓரிடத்தில் சந்திக்கவே மாட்டோம்

நீ பிறந்த போதே
என்னைத்தேடிய அதே
நேரத்தில்
நான் உன்னையும் தேடியதால்
நமக்குத்தேடல்
மிச்சம

நாம் தேடுவதைவிட
இருந்த இடத்தில்
இருந்துவிட்டால்
போதும்
தேடல்
பூரணமாய்
நாமாகும்!
இருந்தாலும்
நாமிருக்கும்
இடம் ஏது?
நீ அங்கே!
நான் இங்கே
நாம் - எங்கே?

●

ரத்தத்துளியின் சுடரும் கனல்

உன்னைத் தேடிவந்தபோது
நீயில்லை
என்னைத் தேடி நீ வந்தபோது
நானில்லை
இருவரும் ஒரே கனத்தில்
சந்தித்தபோதோ
நாமில்லை.
நாமில்லை.

நாமிருந்தபோதோ
நமக்கு நாம்
இல்லவேயில்லை

தொடர்ந்து
நானும் நீயும்
தேடித்தேடி
நடக்கும்போது
யாரோ
யார் யாரோ
சந்தித்து
முத்தமிட்டுக்
கண்ணீா் உருக்கி
கலந்து கொண்டதைப்
பார்த்தோமே
அப்போது சுரந்தது
நம் ரத்தம்.

●

மௌனத்தில் முழங்கும் பேரொலி

பீரங்கி வானத்தில் நீண்டிருந்தது
உயரமாய்க்கட்டிய கோட்டைமேலே
பாதுகாப்பு வேண்டுமே

கருகரு வென்ற கறுப்பு இரும்பு
எட்டடிக்குறுக்களவு
நாலுபேர் உள்ளே ஒன்றாய்ப்படுக்கலாம்
பட்டை பட்டையாய் வார்த்து உருட்டி
வார்வராய் எ.்.கு உருக்காய்
வழவழவென்று நீண்டுகிடக்குது

வானத்தே நீண்ட உயரத்து பீரங்கி
செம்பாரங்கற்கள் கட்டியுயர்த்திய கட்டிடம்
வளைந்துமேலே சுருண்டுபோகும் கற்படிக்கட்டுகள்
மேலே அகன்று கிடக்கும் வெளி!
சுற்றிலும் கோட்டைமதில்
அங்கே - வானத்தை நீண்டுயர்ந்து கிடக்கும்
பீரங்கி!

கோட்டைச்சுவர் வளைந்து நீளும்
பாதைகள் சரிந்திறங்கும்
படிக்கட்டின் சதுரக்கற்களினிடையிடையே
பசும்புற்கள்
உயர்ந்து போகும் மதிற்சுவர்களிடையே
எருக்குளுச்செடிகள் - வானத்தை நீண்டுதுருத்திக்கொண்டிருக்கும்
மௌனத்தேவிரல் நீட்டும்
இருண்ட பீரங்கி

நாலுபுறமும் முழங்கிப்
புகைகக்க கர்ஜித்துக்கிடந்த
பீரங்கியின் மௌனமும் நிஜம்தான்

ஒளிபீறிட வெடிமருந்துக்கனல் பறந்த காலமும்
காதுகளையும் மனசையும் இத்தனை காலத்துக்குப்பின்னும்
பிளக்கிற பீரங்கியின் விந்தை
வானில் நீண்டு காத்திருக்கிறது

பீரங்கியின் இருட்டு இன்னும் குமைகிறது
புரியவேண்டுவதில்லை
இதன் புதிர்
கனவோ கவிதையோ அல்ல
பீரங்கியின் மௌனம்
அறிவோ உணர்வோ அல்ல

இன்றும் முழங்குது பீரங்கியின் வாய்!
மௌனத்தில் முழங்கும்
பேரொலி
இன்றும் கேட்குது

ஆழ்ந்து புகையுது பீரங்கிமேட்டில்!
இருட்டுப்புலத்தில் அதன்
சரித்திரம் கனலுது!
என்றாலும்
வெறும் பீரங்கிதான்
பீரங்கி.

●

ஜோதிசாசனம்

ஒளியின் முத்தே
உனக்கொரு
ரகசியம்

என்கிரணம் உன்னைக்
குடிக்குமுன்
மீண்டும்..
ஜோதி!
ஓடிவந்துவிடு!

நீவந்து என்னைக்
குடித்திடு!

ஒளியின்
உஷ்ணம்
உனக்கு மட்டும்
எட்டும்!
காலம் கடத்தாதே
காலம் நம்
இருவரின் காலன்!

நிமிடத்தில் என் சூடும்
உன் குளிர்ச்சிப் பனியும்
ஆவியாய் உயர்ந்து விடும்
ஜோதீ!

நீ என்
ஒளியில்
கலந்துவிடு
உஷ்ணத்தில்
இழந்துவிடு
ஆவி
மேலேறட்டும்!

●

விஷவைரம்

தழுவும்
அவள் கைகள்
இந்திரநீலம்

விழிகளின்
வெண்மை வானம்!

கண்களோ
இருட்டை உருக்கி வழித்த
மையுருண்டைப் பளபளப்பு

இடையோ
கைமடக்கில் துவளும்
புருவக் கொடிகள்
எப்போதும்
கருகருவெனும் மினுமினுப்பு

முகமோ
வாழைக்குருத்திலை வழவழப்பு

என் மீசையின்
அடர்காட்டு மூங்கில்கள்
அவளை உறுத்த
எப்போதும் முனகும்
அவளிதழ்களின் இடையே
மோவாத புது
அரும்புப்பற்கள்

எப்போதேனும் தென்படும்
ஆலிலை வயிற்றில்
நான் ஒதுங்கும் இருட்டில்
இவையெல்லாம் மறையும்
நீலமாகி இருளும்

கனவுப் பித்தேற்றும்
அவள் மழலை
போதும் விடுங்க
இதழீரத்தில்

இதழுறிஞ்சும்
நடுஇரவில்
எங்கள் இருவரையும்
ஒன்றாக்கும் ரசாயனத்து
குரூரத்துக் குழைவினில்
ஒன்றாகி இரண்டற்றுக் கலந்தும்
ஒன்றினில் ஒன்றும்
முடியாத ஏமாற்றம்

தவிப்பு தகிப்பாகப்
பின்னிரவில் அயரும்போது
அவளின் கசப்பு
விஷமாகி இந்திரநீலமாகும்.

●

கால் பெருவிரல் கொலுசு

ஒளி வளையங்கள்
இருட்சுழிகளைத்
தின்னுவதை
தண்ணீரின்
உள்ளிருந்து பார்த்தேன்

கனவு போலிருந்தது
நினைவில் நிகழ்ந்ததாய்
ஏமாற்றிக்கொண்டேன்

உன்
காலப்பெருவிரல்!
என் கைவிரல்களால்
தொட்டுத்தொட்டு
உன் கால் கொலுசின்
சிலுக்கும் ஜல்ஜல்லென
ஒளி வளையங்கள்
ஒன்றின் மேலொன்றாய்

இருட் பூஞ்சுழிகள்
விரிந்து ஒதுங்கிப்
போவது
உன் மூச்சுதானே?
பெண்ணே!
என் மூச்சும் தான்
கால்களின் வழியே
ஒளிவளையங்கள்
உன்மேல் இருட்சுழிகளோடு
முயங்குவது புரிகிறது
இப்போது
நீயும் நானும்
ஒளி வளையங்களாய்
இருட்பிறைகளுக்குள்
ஒலித்திலக்கமாய் மீண்டும் மீண்டும்

●

பொய்க்கனவு

சரியே!
உன்னையும் என்னையும்
நிலையாமை எனும்
பயமே
மீண்டும் மீண்டும்
உயிர்க்க வைத்து
வாழ்விக்கிறதடீ!

பசியும் சாவும்
நோயும் நொடியும்
இல்லாத பேரின்பம் ஏன்?!

அது பொய்க்கனவு
எனக்கது வேண்டாம்

நாளைக்கே என்
ஜீவன் விட்டாலும்
இன்றெனும் அமுது
போதும்!
போதும்
நாளை எனும்
எதிர்காலக்கனவுகளும்
ஏமாற்றப்புனைசுருட்டும்
அரசியலும்
மதமும்
தத்துவமும்
மனுஷப் புழுவின்
நாற்றமும்

●

இணக்கு

பிணக்கு புரியவில்லை
அவளுக்குப் பிணக்கின் சுவை அதிகம்

முதலில் சந்தித்த காலத்தில்
இனித்த இனிப்பு
இப்போதெல்லாம் கசப்பு!
மயிர்க்கால்களில் வெறுப்பு!
பார்வையில்கூட அருவெறுப்பு
எனக்குப் புரியவில்லை
அவள் ஊடல்

உதடுகளின் கைப்பு
தாவணி அசைவில் நெருப்பு!
கண்களிலோ சாம்பல்!
அடி பெண்ணே
நீ என்னவளா?

கனவுகளின் கசப்பும்
நனவின் இருட்டும் புரியவில்லையடி!
உன் முறுக்கும்
திருப்பும் திறுக்கும்
விலக்கும் ஒதுக்கும்
காரணமில்லா காரணத்துக்கா?

ஆமாம்!
எதுவுமே புரியாதிருந்தாலே
நல்லது!

ஊடலுக்கும் கூடலுக்கும்
காரணமில்லாதிருப்பதே
நிஜமாய் உயர்வு
வாழ்வுக்குக் காரணம் தெரியாதிருப்பதே
சுவை!
காலம் என்று ஒன்று இல்லாதிருப்பதே
சரி!
கடவுள் என்பதுவும்
காதல் என்பதுவும்

கைக்கு வராதிருப்பதே சுகம்
உயிர் எப்போதும் தனித்திருந்து
சலிப்பதே நலம்!

வாழ்வாய் இழைவதே
நானும் நீயும்
மோதும் இந்தப்
பிணக்கும்
இணக்கும்!

●

சதுர்!

உன்னை நினைத்தொரு
கவிதை!
என்னை எடுத்தொரு
விளையாட்டு!
நீயும் நானுமாய்
இருட்டெனும்
அந்தரங்கத்தே
கூடும்
சதுர்!

நாம் காதலித்தோம்
எப்போதோ!
அது விளைந்த கள்ளி!

இப்போது
காதல் இல்லை - ! எங்கும்!
எதற்கு அது?
இடைஞ்சலாய்
இடையில்
ஊடறுத்து நிறை
குறுக்குக்கள்ளி!

ஆனால்
நீயும் நானும்
இரவின் விளிம்பில்...
எப்போதும்
ஒருவரில்
ஒருவராய்
ஒருவருக்குள்
இன்னொருவராய்
இல்லாமல்
போவதை
எந்தக்கவிதை
வந்துஜெயிக்கமுடியும்?
இது
கடைசி வரை
நிரந்தரமான
காவ்யப்புதிர்

●

நனைந்த மாலைகள்

மழை நனைத்த மாலை இருளே!
எழில் நனைத்த கன்னிக் கரும்பே!
நீ ... ஓய்ந்த ஆலை!

சுவைத்த நாக்கு!
அணைத்தபின் வந்த மயக்கம்!
முத்தத்தின்
பின்நனைவு!

எழுதி முடித்த பின் நினைவு!
நினைத்த பின் கனவு!
கனவின் பின் பிணைவு!
உழைப்பின் உழைப்பு

ஆக ... நீ
தூக்கத்தின் பின்
சாவு! ...

ஓ!-மறந்தேன்

நீ எழிலின் எழில்!
மறப்பின் மறப்பு
முடிவின் முடிவு

மழை நனைத்த
மாலை இருளே!

●

கண்மணி!

கண்மணீ !
என்கட்டிக்கரும்பே
உன் ருசியாருக்குப் புரியும்
தங்கையில் உறவுகொள்ள
யாருக்குத்தெரியும்?

என்னுடன் பிறக்காவிட்டாலும்
உன் உறவின் இனிப்பு எனக்கு
மட்டும் தான் தெரியும்!
உவட்டாமல் திகட்டாமல்
இனிக்கும் இனிப்பே!
என் உயிரில் கலந்த உவப்பே!
கனவில் உயிர்க்கும் நனவே
கொஞ்சத்தில் எனக்குள்
கலந்து விட்ட என் ரத்தமே!
உன் உயிரின்
அழைப்பு எனக்கு மட்டும் தான்
என்பதும் எனக்குமட்டும்தான் புரியும்

மனித ஆசைகளில் காதல்தான்
உயர்ந்தது என்பதை எனக்கும்
கற்றுத்தந்த என் பூவே!
உன் உடலில் கலவாது
உன் உயிரில் கலக்கும்
ரகஸ்யம்
எத்தனை சுகந்தமடிப்
பெண்ணே!

உன் ஆசைகளின் நுனியில்
எட்டி நின்று உன் சுகங்களில்
நானும் நறுமணமாய்
உன்னுள் பூத்துச்சுவைக்கும்
ரசாயனம்
எத்தனை பேரின்பம்

பெண்ணைச் சிதைத்துக்கலவாது
அவளுள்ளே புகுந்துவிடும்
அற்புத உருமாற்றம்
உன்னிடம் நான் கற்ற
பேரின்பமடி! சுகபூர்ணானந்தம்!

●

உடலும் பிரியுமா

பூவும் கசங்குமா?
உடலிற்பூத்த இரு
நெஞ்சப்
பூக்களின்
மணமூறும்
இயக்கத்தால்
பூவும் கசங்குமா?

உன் நெஞ்சம்தனில்
படர்ந்த
என் விரல்களும்
பூக்குமா?
கனவும் கசங்குமா?

உடலின் இணைப்பில்
வியர்வை பொங்கும்
மணம் சாகுமா?
இரவின் முயக்கத்தால்
ஒளியும் கருகுமா?
மூச்சும் நிற்குமா?

ஒட்டி
முயங்கும்
உடல் பாய்ச்சலால்
அக்னியும் இணையுமா?

பகலினில் கூட
தேடிந்திரிந்த
மூலை இருட்டுக்கு
ஏங்கிப்பயந்த
நெஞ்சம் சாகுமா?
நானும் அழியுமா?

உன்னில் கலந்த
எந்தன்
உயிரும்
மீளுமா?
உடலும் பிரியுமா?

ரத்தம் ஒன்றும் கனல்

கள்ளின் சுவைத்
தீக்கருக்குத்
துணுதுணுக்குப்போலே
உன் கறுப்பு
நெஞ்சில் அனலாய்
கறுக்குதடி பெண்ணே

தீயின் சுடுநாக்கு
செம்பொன்னைக்
கறுக்குமாப்போல
நாவின் அடிச்சூட்டு
இதழ் சிறுமுத்தம்போல
உன் துணிச்சல்
என் உடலுக்குள்ளே
சுடருது உன்வாசனை

கனவுகளில் நீ வரும்போது
நான் கரையும் ரகஸ்யம்
நனவில் நீ என்னை
நேராய்க்காணும் வேளைகளில்
தேனாய் வடிந்து
வழிந்துவிடுவதன் மாயம்
எனக்கு மட்டும்தான் புரியும்

இரவின் பின்சரிவில் மட்டும்
எப்போதும் வரும் வெறுமை
நீ என்தங்கைதான் என்பதனை
நினைவூட்டும் புதிர் அல்லவா!?

இரவுகளும்
உடல்களும்
முத்தங்களும்
நமக்குமட்டுமே
விலகிப்புரியும்

உறவுகளில் மட்டும் எப்போதும்
தாமரை வெண்மையும்
தூய்மையும் பவித்ரமும்

மனசிலோ உன் கறுப்புநிறம்
எப்போதும் என்னைக் கிறங்க அடிக்குதடி
உன் கிறுக்கு
கிறுக்கிச் சொருகுதடி

இதை உனக்கு இப்படி
கவிதையாய் செய்து தரத்தான்
எனக்கு முடியும்
ரத்தம் ஒன்றும் கனல்
அடிவானத்துக்கு அப்பால்
நம்மை நாமே இழக்கும்
இருட்டும் கறுப்பும் நமக்கெனவே
காத்திருக்குது

அங்கே வாழ்வின் கடைசி இலை உதிரும்
அந்தி முடிவில்
என் ரத்தம்
உனக்காகவே கொதித்து ஆவியாய்
உன்னோடு கலப்பதை
எந்த வானும் மண்ணும் தடுத்துவிட முடியாது
அப்போது தெரியும்
புரியும்
இது!

●

ஓம்

அந்தச்
செட்டிக்குட்டி
என் பட்டுக்குட்டி!

நெஜம்மா
எனக்கும் அவளுக்கும்
ஒண்ணுமே இல்லே
சொன்னா நம்பனும்!

பக்கத்துக் கோயிலுக்கு
அம்மன் தரிசனம்
அவளுக்கு
அம்மன்!
எனக்கு
செட்டியம்மன்

எண்ணைவழியும்
கல்முலைகள்!
அம்மனுக்கு மட்டுமல்ல
என்னம்மனுக்கும்!

குங்குமம் சடைத்து
வழியும் மூக்கின்
நுனிச் சிவப்பு
அம்மனுக்கும்
பட்டுக் குட்டிக்கும்!

ஒவ்வொரு செவ்வாயும்
வெள்ளியும்
இருண்டகோவில் ப்ரகாரத்தே
அம்மனுக்கும்
அவளுக்கும்
புல்வெளியில்
வில்வமரப் புதிரிலே
நெஜம்மா
எனக்கும் அவளுக்கும்
ஒண்ணுமேயில்லெ

வாழ்க்கை ரொம்ப
புனிதம்!
தெய்வம் ரொம்ப
உசிதம்!
என் பட்டுக்குட்டி
என்மடியில்
இருட்டிலேதான்!
பகலிலே வந்தால்
உலகம் வெடித்துவிடும்!

அம்மா அப்பா
பயம்!
அப்புறம் ஏதாச்சும்
ஆயுடுமே பயம்!
வயிறு பெருத்தால்
போச்சு
பயம்!
ஊர்ல உலகத்துல
பேச்சா!? பயம்
ஆனா பூஜையும்
நைவேத்யமும்
சமம்!

ஒண்ணும் ஆகாமெ
யாருக்குமே தெரியாமெ
இருட்டுக்குள்ற இருட்டா
ரகஸியமா
இருந்தா என்பட்டுக்குட்டிக்கு
மட்டுமா
எல்லா செறுக்கிக்கும்
எல்லாமே
சம்மதம்
வெளிச்சத்துக்கு
வந்தாமட்டும்
சத்தியம்!
சாமி!
பூதம்!
சமுதாயம்
மனிதாபிமானம்
வேதம்
மந்திரம்

யதார்த்தம்
பெண்பாவம்
சூத்திரம்
சட்டம்
திட்டம்
போலீஸ்
வக்கீல்
ஓம் ரீம் ஹ்ரீம்
ஓம் தத்ஸத்
ஓம்!

●

தாச்சுகிட்டா

அவளுக்கு
தொந்தி ரொம்ப அழகு!
தொந்தி இல்லென்னாலும்
பொண்ணு
அழகில்லெ!
லேசா சரிஞ்சு
மெதுமெதுன்னு
அடி வயிறு இல்லாத
பொண்ணெ
பேரழகியானாக்கூட
எனக்கு லாயக்கில்லெ
தொந்திமேல
தாச்சுகிட்டா
உலகமே
மறஞ்சு இருட்டாயிடும்
ஆ! பொண் தொந்தி!

●

நிதி

உண்டிப் பெட்டி
எங்கே?
சோலைக்குள்ளருக்கு?
சோலை எஞ்சருக்கு?
சோலை வந்து
காட்டுக்குள்ளருக்கு

காட்டுல எஞ்சருக்கு?
சவுக்குமரக் கூட்டத்துக்குள்ள
சூரியன் மொளைக்குற
சாலுக்குள்ளருக்கு

உண்டிப் பெட்டி எஞ்சருக்கு?
உண்டிப் பெட்டி
உள்ளருக்கு!
உண்டிப் பெட்டில
என்னருக்கு?
உண்டிக்குள்ள
ரத்னமிருக்கு
எடுத்தா
பாம்புமிருக்கு!

பாம்பு எஞ்சருக்கு
பாம்பும்
சவுக்குத் தோப்புக்குள்ள
சவுக்குப் தோப்பு
ஒனக்குள்ள
உண்டிப் பெட்டி
எனக்குள்ள!

●

ஐந்து

அவளை எனக்குப்
பிடிக்கும்
எதிர்வீடு!
குடிவந்த புதுப்பெண்

பள்ளியில்
பாடம் சொல்லிக்
கொடுக்கிற
கனவு அவள்!

அவளுக்குப்
புருஷன் நாலு!
என் மனைவி
கொண்டுவந்த
சரித்திரம்!
தரித்திரமும்!
பெண்டுகள் புரளி!
பாவம்!
நாலாவது கணவனுடன்
நன்றாகத்தான் இருக்கிறாள்
அவள்!

அஞ்சாவது வரலாம்
நூற்றாண்டாய்
பெண்ணை வழிபட
ஆண் எப்போதும்
இப்போதும் தயார்தான்
பாபம் புண்ணியம்
பயப்பிடுகிறவனுக்குத்தான்
அவளுக்கில்லை!

ஒருகணவன் கிளார்க்
அடுத்து ஆபீஸ்ர்க்கணவன்
கணவனது ஆபீஸர்
இரவு வேளைவிருந்தில்
சந்தித்த ஒருமுதலாளி
மூன்றாம் கணவனானான்
அந்த முதலாளியின்

இளம் கணக்கப்பிள்ளையுடன்
என்வீட்டின் எதிர்வீட்டில்
அவளுடன் நான்காவது
வாழ்க்கை!

இப்போது என்னைப் பார்த்துச்
சிரிக்கிறாள்!
நானோ
அவளைப்பார்த்துப்
பார்த்து....

நான் அவளைப்போல்
தைரியசாலியுமில்லை
இருட்டில் பொண்டாட்டிதாசன்
வெளிச்சத்தில்
எல்லாருடனும்
சுகிக்கிற
ஆண்குலம்!
ஆண் - மகன்

என் மனைவியின்
ஆசாரஇருட்டு
ஒழுங்கு
குடும்பம்
ஆசாரம்!
போதாதா
ஐந்தாவதுமா?

●

நிர்வஹணம்

எனதென்றிருந்தேன்
அவளைத்
தனதென்றான்!

அவளும்
அவனைத்
தனதென்றாள்!

தழுவினாள்
முத்தமிட்டாள்
புணர்ந்தாள்
அவள் எனதென்ற
பொய் மெய்யாயிற்று!

விடியும் வேளை
உறை கழற்றிய
தலையணையாய்
என் கீழ்
படிந்து
முயங்கி
காமத்தை வெல்லும்
வேளையிலே
அவள் வினாவினாள்
நீங்க எனக்குத்தானே?

நான் கேட்டேன்
நீ அவனுக்குத்தானே?
அவள் அதிர்ந்துவிடவில்லை
எனக்குத்தான்
நீங்க சொந்தம்
அதாவது நீங்க ரெண்டுபெரும்
என்றாள் நிர்வாணம்பொங்க!

●

நீயாவது!?

ஏய்!
சடைச்சி!
உன்னிடம் என்னடி
இருக்காம்!?
இருக்கு
ரெண்டு மூணு!
இல்லையென்று யார்
சொல்லமுடியும்?

ஒவ்வொரு மனுஷனும்
கிறங்கிச்சரியும்
மூலை இருட்டு!
பசிக்கும் பெரும் பசி!
சிரிக்கும் பெருஞ்சிரிப்பு!

ஆனா பைத்தியமா
அடிக்க இந்த எலும்புக்குள்ளும்
கூம்பிய சதைக்குள்ளும்
குழி இருட்டுக்குள்ளும்
என்னதான்
போதை இருக்கு?!

உலகத்தை ரெண்டாக்கிய
கப்பித்தோலிஸமா?

நெல்லிக்காயாய்ச்
சிதறிய மனுஷக்கூட்டத்தை
இரவினில் மூட்டி எரியவைக்கும்
முக்காலி அடுப்பா?
எரியும் தீ?

உன்னிடம் இருப்பது
கம்யூனிஸமா?
சோஷ்யலிஸமா
சொல்லேன்
நீயாவது!?

●

உலர்புஷ்பங்கள்

வருடங்கள்
பலவாச்சு
அவளைப்பார்த்து!

தொஞ்சம் சிரமம்தான்
எனக்கவள்
தாயுமில்லை
தாரமில்லை
தங்கையுமில்லை
என் காதலியுமில்லை!

பசித்த நேரத்தில்
பார்த்தே பசிதீர்த்த
பாவை!

இது எந்த ஜாதி?!
இருக்கிறது இப்படி ஒரு
குலம்!
தெரியுமா?

ஒருகாலத்தில்
இளமையை இனங்கண்டு
திகிலாய் அனுபவித்து
துடிப்பாய் ரசித்து
இருட்டில் தூங்காது ஏங்கி
பகலினில் கண்டபோதெல்லாம் கனிந்து
காலத்தைத்துரத்தி
அவளையும்
அவள்களையும்
துரத்தித்துரத்தி
விரட்டித்திரிந்து
கனவுகளை நிஜமாக்கி
நிஜங்களைத்
தீர்த்துதண்டு

அப்போது
வந்த
பங்கு
இவளும்!
கனத்த செவ்வுதடுகள்
எனைக்கண்டதும்
விரிந்து
கண்கள்
பளபளக்க
உள்ளார்ந்து
பூத்துக்குலுங்கும்

மார்புதுடிக்கத்
துடிக்க எனைக்கடந்து
செல்லும்
அவளில்
உலகம்
முடியும்!

அவளல்ல!
அவள்கள்!
இப்போதோ
அவளுமில்லை
அவள்களுமில்லை
வருடங்களும் பலவாச்சு
அவளையும்
அவள்களையும்
பார்த்து!

இன்று
அவள்கள்
எல்லோரும்
முகமும்
நெஞ்சமுமில்லா
உலர்புஷ்பங்கள்

●

கூவம்

கலைந்த மழை மங்கல்
சிதறும் தூரல் திரை!
நனைந்த மக்கல் கூரைகள்!
கூரைமீது ஈரப்புகையெழுச்சி!
மங்கிய காட்சியில் மரம் பச்சை!
பனிப்புகைக் குழம்பல்

கூவத்துச் சாக்கடைப் பாய்மீது
மழைச்சாரல் சிதறும் முத்து
நீர்ப்பரப்பில் எருமை முகத்து மூச்சு!
நாற்றத்துக்குள் எருமைக் குளியாடல்!
நனைந்த மண்ணில் பதிந்த காலடி
சகதிசேர்த்த சேற்றுக் கோலம்!

முழங்கால் வெண்மை "களை"யாய்
கண்ணை உறுத்தி இழுக்க
இடுப்புச் சேலை மாராப்பு
ஒதுக்கி ஒசிந்து அவள் -
நாற்றத்து நறு நீரில்
துடைகள் நனைகையில்
கூவத்தில் எருமைகள்
அசையாத நெடுமூச்சு

நானும் நனைந்து
கலைந்தும்,களையெடுக்க
நெஞ்சில் உரமில்லை
அவளும் நனைந்து
நாற்றம் விட்டு
மறு கரை ஏறியும்
என்னிலே பார்வையில்லை!

உடலேணி ஏறி ... அவள்
உள்ளத்தோணிபற்றி
நாற்ற உலகிடையே
ஏறிவர் பவனி
ஓ!அது ...
பேசாத பேச்சு!
மழைச்சாடல்
மூட்டம்
இருள்
மோனம்
கூவம்.

●

வாழ்க்கை

நாள் சட்டை உரித்துச்
சாகும் நேரம்!

வியர்வை நனைந்து
சட்டை முதுகில் ஊறல்
உழைத்து முழத்த
மாலை அயர்ச்சித் தொய்வு!

உடைத்த சோடா
கியாஸ் பொங்கல் நுரை
நெஞ்சில் வழித்த
கரிப்பு தொண்டையில்

பகலின் குழைவில்
நைந்து நெளிந்த இரவு!

தாழ்ந்த தகரமச்சில்
ஒட்டுக்குடிச் சகிப்பு
புகை நெரிசலில்
நிலாப் பிளப்பில் பசி தீரல்!

மண்தரை அட்டைச்
சுருள்களாய் குழந்தைகள்!

கிழிந்த பாயில் அவளைப்
புணரும் கிழிசல் இரவு

இறக்கம்!
கிறக்கம்!
உறக்கம்!
ஆழம்!
ஆழம்! பின்
விடிவா?
முடிவா?
வாழ்க்கை!
வாழ்க்கை!

தொழில்

இருள் மறைத்த தொழில்!-தொழிலா???
இருள் பிடித்திருக்க
ஆண்மையின் கரங்கள்
பின்னிப் பிணைத்து
சுற்றிப் படர்ந்து
பெண்ணாகப் பிறந்த
ஈசன் ஆட்டம்! அது

வேர்வை சிதறி
ரத்தம் பொங்கி
மயிர்க்கால்கள் புடைத்தெழும்பி
இதழ்கள் அழுந்தி
கண்கள் சுருள
குரல்கள் மங்கி
பிணங்கி இழைய
ஈசன் ஆட்டம் !
தொழில் !

முன்னையும் பின்னையும்
ஆட்டுவேன் ஊட்டுவேன்
ஆட்டிவிட்டு
நைய்யவிட்டு
நசியவிட்டு
பெருகிப் பலுகவிட்டு
குஞ்சும் குளுவானுமாய்
உதிரிகளாய்ப் பிறந்த
குழவியிலே தொடங்கும்
ஓயாத அழியாத
ஈசன் ஆட்டம்.

மங்கையும்!பங்கனும்!
பங்கனில் மங்கையும்
மங்கையில் பங்கனும்
முக்கும் முனகலில்
வேகும் தீப்பாளத்தில்
சேர்ந்து.'
புலர்ந்து.'

மலர்ந்து.’
கலந்து
பின் -
சதுராடி
முன் -
மதுரம்
சிதறி,
உருகி
பிறழ்ந்து
சலித்துக்
கசந்து
குழம்பி
தள்ளாடியும் -
ஆடும்
ஆட்டிவிடும்
ஈசன் ஆட்டம்!
அப்பப்பா! அது தொழில்!

●

குறி

முத்தம் கேட்டேன்
உம்ஹூம்!
பயம்மாருக்கு என்றாள்

விடவில்லை தொடர்ந்து
முனைந்து முகர்ந்தேன்
முத்தமிட்டேன் நாவால்
நக்கிச் சுவைத்தேன்
எச்சிலை இதம் செய்து
குதப்பி ருசித்தேன்
அப்போதும் மாட்டேன்
என்றாள்

சிலப்பதிகாரம் படித்துக் காட்டினேன்
குறளின் இன்பத்துப்பாலை ஊட்டினே்
ஹவ்லாக் எல்லிஸ்ஸையும்
கொக்கோகனையும்
திறந்து புறியவைத்தேன்
காளிதாசனைக் கறந்து தந்தேன்
நளனை பிட்டு அதிவீரராமனை
நேரில் காட்டினேன்
போடா என்றாள்
கால்களால் எட்டி உதைத்தாள்

கால்களை கட்டிக்கொண்டு
உருண்டேன் கும்பிட்டேன்
வாத்ஸாயனா!
ஒரு முத்தம் தர
இத்தனை பாடா? உன் பாடம்
குப்புற விழுந்ததே அடியோடு!

கடைசியோ கடைசியாய்
உதறி எழுந்தேன் பார் அவளை?!
காமம் தோற்றது என்
கால்களைக் கட்டிகொண்டு முத்தினாள் குறியில்!!

●

விடிவும் படிவும்

நிர்வாணம் புரியுது
தொடாதே என்றாள் தோழி!
புரிந்தால் விலக்கம் ஏன் எதற்கு?
என்றான் அவன்

நிஜமாக நிர்வாணமாய்
நான் இல்லை
என்றாள் நிர்வாணமாய்

விலக்கம் என்பது
ஏது என்றான்
அவன்மேல் படர்ந்து ஊர்ந்தபடி!

அவனும் நிர்வாணம் சுகம் தருவதைவிட
கனவுதான் அதிகம் தருது என்றாள்
புடவை மூடியபடி

பேண்டுக்குள் கால்களைச் செருகி
சட்டைக்கைகளை உருட்டிவிட்டபடி
தலைமுடியினைக் கோதிப் பின்தள்ளி
மீண்டும் நிர்வாணத்தை மூடியபோது
அவனுக்குப் புரிந்தது

எந்த நிர்வாணமும் மோட்சமும் சொர்க்கமும்
தெய்வீகக் காட்சியும்
நிர்வாணமல்ல
மோட்சமல்ல
சொர்க்கமல்ல
தத்வமல்ல
என்று!

●

நீ ஏன்? நீ எதற்கு?

அல்லி மலர
நிலவு ஏன்?
இருட்டு போதும்!

வேட்கைக்கு
நான் போதும்!
நீ எதற்கு?

தாமரை அலர
கதிரவன் ஏன்?
விடிவு போதும்!

மலர்ச்சிக்கு
நான் போதும்!
நீ எதற்கு?

இயற்கை காட்ட
புலமை ஏன்?
கவிதை போதும்!

எழிலுக்கு
நான் போதும்!
நீ எதற்கு?

காதல் வாழ
பிணைப்பு ஏன்?
தவிப்பு போதும்!

இறைவனைத்தொட
என்னுள் உற்றுயிராய்ச்
சாடிவரும் நான்போதும்!
நீ எதற்கு? ----?

●

கூடம்

கூடம்
கூடத்தின்மேல் கூடம்
அதைவிடச்சிறியகூடம் அதற்கும் மேலே
சின்னச்சின்னதாய் ஒன்றுக்கு மேலொன்றாய்
கால்பரப்பிக்கூடத்தின்மேல்கூடமாய்
நிற்குது கூடகோபுரம்

கீழே நூற்றெட்டுக்கால்கள் மேலே?
தொன்னூற்றொன்பது
கால்கள் மேலேற கூடகோபுரத்துக்
கால்கள் ஒன்பதொன்பதாய்ச்
சுருங்கி கோபுரம்கூடமாய்
ஒற்றைக் கூடமாய்
கோபுரத்து உச்சியில்
ஒன்பது கால்களில்
நிற்குது கூடகோபுரம்

சச்சதுரமாய்ப்படர்ந்த கீழ்த்தளத்தின்மீது
நிற்கும் நூற்றெட்டு கால்களும் கோபுரத்தின்
உச்சிக்கூடத்தில் தொங்கும் ஒன்பது
கால்களில் அந்தரத்தேநின்று
தவம் புரியுது! கூடகோபுரம்

எங்கும் இடிசல்!
எங்கும் பிளவுண்ட சுதைச்சிற்பங்கள்
கோபுரம் என்றானால் சரி
ஒன்பதாய் உயரேஏறி
என்பதாய்தான் பெருகி
மேலே இடிந்து ஆகாயத்தே
தனிக்கூடமாய் உதிர்ந்தபடி
தவமியற்றுது கூடகோபுரம்

கால்கள் வழுவ நூற்றாண்டாய்
உதிரும் சுண்ணத்து சுதைப் புழுதி
மழைப்பாசிகருக்கிட்ட சுவர்களின்
பிளவுகளிலெ பதுங்கி வரும் இருட்டுப்புதர்கள்
பல்லாண்டாய்நனைந்து ஊறிய சுவர்ச்சந்துகளில்
சடைத்தெழும்பும் கள்ளிச்செடிகள்

தரையெல்லாம் குண்டும் குழியுமாய்
கிண்டிய எலிகள் குமித்த மண்குவியல்கள்
நெளியும் புழுக்குலம் சில்லிடும் வண்டுகள்
தாமரைகளான விதானம் கவிழ்ந்திடிந்து
உதிர்க்கும் வெளவால் புழுக்கைகள்
உயிரினங்களின் தங்குமிடமான
கூடகோபுரம்!

வெயிலேறும் வேளைகளில்
கோணங்களாய்ப்படியும் வெளிச்சம்
இருட்டோடுபோராடும்
ஒளிக்கோபுரம்
உள்ளே என்றும் எப்போதும்
இருட்டுக்கோபுரம்

வருடங்கள் நினைவைத்தின்ன
சரித்திரம் மாறியும் தேசங்கள் சிதறியும்
தான்மாறாது வரலாற்றின் பக்கங்களிலும்
காண முடியாத கூடகோபுரம்
கண்முன்னே தூள்தூளாய்
காலமெல்லாம் நொறுங்கி
மாறும் அண்டத்தைச்சுட்டும்
கூடகோபுரம்.

●

வாழ்வின் பாம்புக் குறிப்புகளிலிருந்து

1

பாம்பென்றாலே
பயம் தான்!
பயம் தான்
பாம்போ?
பிறந்ததிலிருந்தே
பாம்பென்றால் படையும்
நடுங்கும் என்று
தெரியும் தான்..!
பாம்பு செத்தாலும்
பயம் செத்ததில்லை
கனவு செத்தாலும்
வாழ்வு சாவதில்லை!
பாம்பே!

2

இரவும் பகலும்
பகலும் இரவாய்
நீண்டு செல்லும்
காலமொரு
பாம்பு
நம்மைச்சுற்றி
விழுங்கப்பார்க்கும்
ஆனால்
காலப்பாம்பின்
விஷம் தலை தூக்கும்போது
யாரும்
இருக்கப்போவதில்லை..!

3

விஷம் இருக்கும்
பாம்புக்கும்
தலையில் வளையம்
விஷமில்லா
மனிதனுக்கு
தலையெல்லாம் சுழி!

4

ஒன்றில் ஒன்றாய்
ஒன்றை ஒன்று
கவ்வியிழுத்து
வாயிலிருந்து
தலைவரை
தலையிலிருந்து
வால்வரை
வழுக்கியபடியே
ஒன்றில் ஒன்றாய்
ஒன்றுக்குள் ஒன்றாய்
விழுங்கித் தள்ளும்
கவலைப் பாம்புகள்
எனக்கு மட்டுமல்ல!
உங்களுக்குள்ளும்
எனக்குள்ளும்
நமக்குள் நமக்காய்
விழுங்கித் தள்ளும்
எத்தனை எத்தனை?!

5

கவலைப் பாம்பை
மிதிக்க
இன்னொரு பாம்பா
வேண்டும்?
கனவுப் பாம்பை
எதுக்க
இன்னொரு
கனவுப் பாம்பா
வேண்டும்
வறுமைப் பாம்பை
சாதிக்க இன்னொரு
பாம்பா வேண்டும்
நீ நானும்
போதாதா?

6

இவையெல்லாம்
பாம்புகளா
கோடுகளா?
குறுக்கும் நெடுக்குமாய்ப்
போட்ட கோடுகள்
புள்ளிகள் இழுவைகள்
முழுமையற்ற
புள்ளிகளின்
சேர்க்கைதானே
பயம் ஏன்?
சீறுகிறதே!
ஆனால்!
கோடு
சீறும் கோடு
சிரிக்கும்
எக்கலிக்கும்
நீயும்
கோடாகிச்
சிரியேன்!

●

தன்மை

கனவுக்
காலெடுத்து நடந்தபோது
காலற்றுப்போனேன்
அம்மாவும் சொன்னாள்

காலற்ற என்னைப்பற்றி
சிறகை விரித்து
எழுந்தேன் கலையாய்
பறக்கப் பாய்ந்த போது
சிறகொடிந்து வீழ்ந்தேன்
சிறகை ஒடித்தது
என்னை விரும்பியவள்!

குபுக்கெனப் பாய்ந்து
கற்பனைக்கொடியை வீசி
மலர்ந்தேன் மொட்டாய்
எழுந்துடைந்தேன் பூவாய்!
சுருண்டு விழுந்த போதறிந்தேன்
ஆணிவேரை அறுத்த கைகள்
என்னைத்தழுவிய
என் மனைவியென்று

இல்லாத குழந்தையும்
என் ஆசைக்கோட்டை
தகர்த்துச் சரியவைத்து!
கல்வி கனி பறித்துத்
தந்த தந்தையும்
வாழ்வின் நிஜத்தை ஆணியாக்கி
என் கால்களில் அறைந்துவிட்டு
தன்னுலகம் போனார்

நண்பனோ
பூமியைத்துளைத்து
கற்பனைச்சுரங்கத்தை
வெட்டி கவிதையைத்
தோண்டி எடு என்றான்

சுற்றமும் சூழலும்
என் தலை மீது வீசும் ஒளியை
வழுக்கையாய்
மொட்டைத்தலையாய்
கண்டு ப்ரம்மிக்கிறார்கள்
என்னையல்ல!

கனவோ
காததூரம் நின்று
கெக்கெலிகொட்ட
பசியோ
நிஜம் நிஜம் என்று
குத்திப்புரட்ட
கற்பனையோ
பொய்பொய்யாய்
மத்தாப்பூவாய்ச்சிரிக்க
கவிதையோ
இருட்டாய் இருட்டில் கனியும்
நெருப்பாய்
வழியின்றி எரிய - கருக
கலையோ
எண்ணற்ற அலைவீசி
என் தலை மீதே
ஓயாது சரிய
வாழ்வோ
கொஞ்சம் கொஞ்சமாய்
இல்லை இல்லை என
இல்லாமலே
இருக்க
நானே
என்றும் என்றும்
என்றும் போல்
இருந்து இருந்தே
இல்லாமல் இல்லாமல்
ஆகிறேன்
ஆகிப்
போகிறேன்.

●

எனக்கும்

என்னையும்
என் தாய் பெற்றெடுத்தாள்
எதற்காக என்றுதான்
புரியவில்லை

என்னையும் என்
தந்தை தான் கற்பித்தான்
எதை என்று தான்
தெரியவில்லை

என்னையும்
என் ஆசிரியன்தான்
பழக்கிவிட்டான்
ஏனென்றுதான்
காணவில்லை

என்னையும்
ஒருத்திதான் கனவுதந்தாள்
எப்படி என்றுதான்
ஏமாறவில்லை!

எனக்கும்
நண்பர் துணைநின்றும்
யாரென்றுதான்
கனியவில்லை!

எனக்கும்
கவிதை எழுதவே
ஆசை!
கவியவேயில்லை
நெஞ்சம்!

எனக்கும்
எழுதாமலிருக்கவே
முடிவு!

முடிவு எதுஎன்பதில்தான்
எப்போதுமே
பயம்!

உலகைத்தவிர்த்து
மனிதரைமறந்து
ஒதுங்கிவிடமுடிந்தாலும்
தனியாயிருந்து
பொதுவாய்க் கலந்து
ஒன்றாகும் பெருவழி
எனக்கும்
உனக்கும்
எப்போதும்
சாஸ்வதம்
மிச்சம்
எனக்கும்.

●

விச்வம்

உனக்குத்தெரியுமா?
அம்மாவும்
ஒருபெண்தானென்று?!
அவளும் ஒருநாள்
காதலித்து
ஒருத்தனை அணைத்து
ஏதோ ஓரிரவில்
உன்னை வயிற்றில்
கருக்கொண்டு
பத்துமாதம் வலியின்பின்
கால்களுக்கிடையில்
மிருகம்போல்
ரத்தச்சேற்றில்
உலகில் உலகில்
தள்ளி
மனிதனாய்ப்
பெற்றாளே!
இதுதான்
தாய்மை
எனும்
பெருமை என்றால்
அது புழுவுக்கும்
பூச்சிக்கும்
உண்டே
தாய்மை என்பதன்
பெருமை தாயாவதில்
இல்லை இல்லை -
தாய்மை என்பது
தன் நலமில்லை
தாய்மை என்னும் கனிவு
உலகாய் விரிந்து விச்வமாய்
உடைந்து மனிதமாய்ப்
பெருகுவதில் தான்
இருக்கிறது.

●

சூதும் வாதும்

தோன்றியதைச்
சொல்லாதே!
கனவை
எழுதிவிடாதே
காலத்தைப்
பொய்யெனச்
சொல்லிவிடாதே
கவிதையை
நம்ப ஆரம்பிக்காதே!
வாழ்வை
ஓடி ஆடாதே!
நிஜத்தைப்
பொய்யாக்காதே
நல்லது என
எதையும் பிரிக்காதே!
கெட்டது என்று
ஒதுக்காதே
பிழிந்து சாறு எடு
கணக்குப்போடு!
எதையும்
லாபத்தில்
கழி!
ஓவ்வொன்றாகக்
கழட்டிவிடு
தனியே
வந்ததைத்
தனியாகவே
கொண்டுபோ
உன்னையும்
உட்பட!
அப்போதுமட்டும்
புரியும் சூது!

●

கவிச்சி

எனக்காகக்
காத்திருந்தால்
அங்கு வருவேன்
என்றான்
கோபாலன்

மீன்குழம்புடன்
மணக்க மணக்க
சாப்பிடலாம்தான்
ஆனாலும்
மீன் என்ற கவிச்சி
கனவாய் இன்பம் தருவது
எங்களுக்கு மட்டும்தான்

உலகின் ஒருபுறமே
ருசியின் பக்கம்
மறுபுறம் இருட்டு

எனக்கு இருட்டியது
உனக்கு வெளிச்சம்
எனக்குப் புரிந்தது
உனக்கு வேண்டுவதில்லை

நான் உண்பதைத்தான் நீயும்
உண்டாலும் உனக்கும்
அதுவே ருசிக்கும் என்ற
தத்துவம் குட்டிச்சுவரே!

மீன் எனக்கு ருசிதான்
உனக்கு அதுவே குமட்டல் கவிச்சி!
நமக்கு மட்டும் மீன் மணக்குமா?
கவிச்சிதான்! ஆனால்
மீன்மட்டுமா கவிச்சி?

கைகால்களின் மடக்கில்
கவட்டிகளின் முடிச்சுருள்களிலே
வடியுது மனுஷக்கவிச்சி!

எப்போதும் மணக்குமா
இந்த உடலும்?
அழுக்கு சேரக்
கவிச்சியும் கவலும்
சேரும்!

எந்த உடலும்
அழுக்குக்குச் சொந்தம்
சொல்லப்போனால் உடலே
அழுக்கு!
கழுவிக்கழுவி
வாசனை யூட்டினும்
மீண்டும் மணப்பது
உடலின் உண்மை!

நெஞ்சை மணக்கும்
எண்ணங்களும்
கனவு மணக்கும்
கவிதைகளும்
கனல் மணக்கும்
பூக்களும்
உடல் மணக்கும்
உயிர்களும்
உண்டு கோபாலா!

வாழ்வின்
நெறிகளில் வாழ மறந்த
எனக்கும்
என் கவிதைக்கும்
வாழ்வு தருவதே
இந்தக்
கவிச்சிதான்
புரியுமா உனக்கு?

மீன்குழம்பும் மீனின் சுவையும்
நமக்கே புரியும்.
வாழ்வு மணத்தின்
தூய்மை மட்டும்
தனியே எங்கிருக்கு?
சொல்லேன்?!
மீள்வது கவிச்சிதான்.

வசம்

உடலை வளர்க்க
உயிர் வளர்க்க முயன்றேன்
உயிரோ உடலாயது!
உடலோ உயிரின் உள்ளாயது
உணவோ உடலை வளர்த்து
உள்ளே போய் உணர்வாய்
எழுந்து ஆடி ஆட்டிவைத்தது

அறிவு இழுத்தடக்கினால்
உணர்வும் நெஞ்சும்
ஆடியே சூறையிட்டது

மனசை ஆழ்ந்தகழ்ந்தபோது
அறிவு மேலே உயர்ந்து
கொடிவீசியது!

ஆயின் என்கொடி
அடியாழத்திலே
நனைந்து கசிந்தது

வளர்த்த உடலும்
வளர்ந்த உயிரும்
திரைந்தன!

வியாதிகள் கனிந்து
புழுத்தபோது
உயிரும் உடலும் பழுத்தன

கனவுகள் கலைந்தபோது
நனவுகளும் கரைந்தன

இருப்பை மட்டும் நம்ப
ஆசைதான்
கைவசமில்லை!

●

வெறுமை

இடம்
இல்லை எனின்
இருப்பும் ஏது?

நானும்
நீயும்
இல்லை எனின்
நாம் ஏது?

நாமே
இல்லை
எனின்
அவன் ஏது?
உலகேது?
உருவேது?
நிழ லேது?

எல்லாம் வெறுமை!
வெறும்
வெறுமை
உன்னத
வெறுமை
வெறுமை
உள்ளவரை
நீயும் நானும்
அவனும்
உண்டு!
நாமுண்டு

நம்
இருப்பும்
இயலும்
எல்லாம் எல்லாம்
எதுவும் எவையும்
உள்ளவரை
எல்லாமே இல்லை!!

●

ஓன்றின் ஒன்று

ஓ தம்பி!
புதுக்கவிதை
ரசிகனே!
முடிந்தால் சொல்லேன்
காரியங்களை நம்பிய
லட்சோபலட்சம் பேரும்
போன குழி
லாபமா?
ஓன்றே ஒன்று?
சாவு எனும்
சத்தியத்தைக்
கழித்து நின்ற
எந்தக்கொள்கை
கைவசம் இருக்கு?
பசி நித்யம் என்றால்
சாவு மட்டும் அநித்யமா
சொல்லேன்..!
வாரிஉண்ணும்
சோறுமட்டுமா
இருக்கு?
இரவின் மடியில்
கனவும்
மிச்சம்!
கனவு மட்டுமல்ல
கட்டிலும்
வியர்வையும்
புணர்ச்சியும்
பிள்ளையும்
ப்ரஸவமும்
மட்டுமல்ல
அந்தச்சாவும்
நமக்கு நித்திய
ஜெயம்தான்
தானாய்ஜெயிக்கும்
சாவும் நாமும்
வேறல்ல
இரண்டும்
ஒன்றே ஒன்றே.

●

காணாக் கவிதை

கவிதைச்
சுனை தேடிக்
ககனமெங்கும் அலைந்தேன்
ஓசையின் காடு அலைக்கழித்தது

பொருளின் செறிவில்
வீழ்ந்தேன்
பின் -
தத்துவச் சரடு சுற்றிப்
பம்பரமாய் சுழற்றியது

யாப்பின் யாப்பும்
மோனையின் மோனையும்
தளையின் தளையும்
நெருக்கிய பின்
மரபுத் தணலிலிருந்து தப்பி
புதுப் படிமத்தின் பசியில்
உருண்டேன்

அப்போதும்
கவிதையென்னமோ
ககனத்தே தான்
மூடுண்டு கிடந்தது

புதிய வார்த்தைக் காடுகளும்
சொல்லின் ஜால ஸ்வரங்களும்
சொற்களும் பொருளும் உயிராய்
நிற்கும் அமைதியின் ஆழம்
எனைக் கவிந்து மூடியது

காலமெல்லாம் தேடியதை
கவிதையிலும் காணோம்!
கவிதையையும் காணோம்
மௌனம் கூட கவிதை
பயம் செய்து மருட்டியது!

மௌனத்தின் பேரோசை
எங்கும்
கவிதையின் இருள்
நிரந்தர
மானுட சாபம்

என்றும்
காணாக்
கவிதைபூ வந்தபூ
கவிதை பூவந்தபூ

●

பூவும் பூச்சியும் கவிதையும் நீயும்

மழை மங்கல் மாலை
விளக்கை ஏற்றினேன்
தூசுதூசாக கடுகுகடுகாக
மிளகு மிளகாக பூச்சிகள்!
ஈசல்கள் ஈரவண்டுகள்

ஞொய்ய்.....ய்.....ட்டட்டட!.....
ட்விச்சி! ட்விச்சி! ட்விச்சி!...
ட்ர்... ட்ர்... ஸ்ஜ்...ஜ.!ஸ்ஸ்!...
ஸ்ருட்... ஸ்ருட்... ஸ்ருட்...
சர்ரிட்டுப்பறக்கும்
விந்தைப்படைப்பு!

கவிதைக்கும் நேரம்
வெண்தாளெடுத்தேன்
புள்ளி புள்ளியாய் எழுத்து எழுத்தாய்
வார்த்தை வார்த்தையாகி
வாக்கியப் பாம்புகள் பரந்து
ஓசைச் சீறல்கள்! ஓலக் குமுறல்கள்!
அழகு நடனமிடும்
கண்கொள்ளாக்காட்சி!
கனவாய் விரிந்து
கவிதையாய் கனிந்து
எழிலாடும் நேரம்!

இறகுகள் உதிர்ந்து புழுவாய்
நெளிந்தன பூச்சிகள்
கனவுகள் திரிந்து
கவிதை உடைந்தது
விளக்கைச் சுற்றி
அனல் பொசுக்கிவிழுந்தன
வார்த்தை சிதறி
காகிதம் பறந்து சிதறின
நெளிந்த புழுக்கள்
தவித்து மடிந்தன
கவிதைப் பூ உதிர்ந்தது

குழந்தையாய்ப் பிறந்தது
மனிதனாய் வளர்ந்து
மங்கையின் பங்கெடுத்து
ஏறிய பின்னலில்
பிள்ளை உருக்கொடுத்து
தளர்ந்து இற்று
ஆடித்தள்ளாடி
சிதையேறும் மனிதா!
பூவும் பூச்சியும்
கவிதையும் நீயும்
ஒன்றுதானே!
ஒன்றேதானே!

●

பீடி

குட்டைப்பீடி
முனை கங்குச்சிரிப்புச்சிவப்பு
உள்ளோட்ட காப்பிக்கு கூத்தாடும் புகையிழுப்பு!
மாலை வெயிலுருக்கி
விட்டுவிட்ட அருவி
வெள்ளம்!

கும்மிட்ட பீடீமணம் சுருளிட்ட புகையிடையே
வட்டமிடும் வளையங்கள் ஏறிவிழும் சிதறல்
இருளை தழுவி ஆடி ஏறி
முயங்கவந்த
நிலாவட்டம்!

உதட்டோர மடிப்பின்னிலே புரட்டிவிடும் நாக்கிடையே
நைய்ப்பு தட்டும் பீடிக்காக எழுப்பிவிடும் கசப்பு!
நிலவையணைத்து
உள்ளடக்கிப் புணர்ந்த
மங்கல் இரவு!

துப்பாக்கிப் புகை வாய்வழியே சாடி
இருமலுடன் கரிப்புடன் மூக்குவழி வாரல்!
மங்கல் இரவுடன்
பொங்கும் நிலவுடன்
ஒட்டாத காலம்
பீடி அவனுக்கு!
கவிதை
எனக்கு!

●

கவிதையிலில்லை

கவிதை
ஒரு
பிணம்
உயிருள்ள
பிணம்!
என்றும்
உயிர
உன்னிடம் தான்
கவிதையிலில்லை..!

வானம்
ஒரு புள்ளி!
விரிவல்ல

மனம்
ஒரு மறு
கடலல்ல

ஞானம்
ஒரு இருட்டு
வெளிச்சமல்ல

தாய் ஒரு
மலடு
பாலருவியல்ல

நீ
ஒரு
முனை
நானல்ல!

●

எனக்கு மேலே கீழே உள்ளே வெளியே!

எழுதப்பேனா எடுக்கும் போதெல்லாம்
வால்மீகியும் கம்பனும்
பயமுறுத்துகிறார்கள்

ஒருபுறம்
ஹோமர்
மறுபுறம் சிலம்பிசைத்த இளங்கோ!
கில்கா மெஷ்ஷின்
வாழ்வின் ரகசியப்பூ எதிரே!
பின்னே திரும்பிப்பார்த்தால்
முச்சங்கத்தின் கவிக்கூட்டம்!

நாலுபுறமும்
கூச்சலிடும் மரபுக்கும்பல்!
சமஸ்கிருத கவிஞர்கள்
ஸெல்மாலாகர் லெவ்!
குருகங்! மனு! வகை வகையாய்
நீதிக்குரல்கள் சூத்திரங்கள்!

டாஸ்டவ்ஸ்கியின்
இருட்டும் குசுகுசுப்பு!
டால்ஸ்டாயின்
வெண்மை புரளும்
தூய்மை எளிமை!
நூற்றாண்டுகளாய் சத்தப்படுத்தும்
ஏசுவும் ஷேக்ஸ்பியரும்
வ்யாசனும்
எதிர்குரல் வீசும்
ஸெர்வாண்ட்டிஸ்
உற்றுப்பார்த்து கேலியாய்ச்
சிரிக்கும் காரல்மார்க்ஸும்
எமிலிஜோலாவும்
மிரட்டும் துர்கேனிவ்வும்
வெட்டிவிழிக்கும்
மாப்பசானும்
வர்ஜீனியாஉல்ஃபும்
கெக்கெலிகொட்டும்

யூரி.ஃ.ப்பிடிஸம் மௌனியும்
தலைமேல் ஏறிகொண்டுவிட்ட
ஜேம்ஸ்ஜாய்ஸம்
ஊமைசாட்சியாய்
பிராஸ்ஸிஸ் கா.ஃ.காவும்
புதிரச்சிரிக்கும் பாரதியும்
கசக்கச்சிரிக்கும்
புதுமைப்பித்தன்.
தோளில் உட்கார்ந்துக் கொண்ட
புதுக்கவி பிச்சமூர்த்தி .க.நா.சு முதல்
புரட்சித்துணி வெளுக்கும்
இன்றைய புதுத்தம்பிகள்வரை
பேர் தெரிந்த
பேர் தெரியாத
பேர் பெற்ற
பேரே இல்லாத
அண்ணன்மார்
ஏராளம்!

எனக்குத் தெரியாமல்
என் தலை ஏறிய
பிறமொழி அப்பன்களும்
அம்மைகளும்
சோதர சோதரியரும்
எண்ணில் அடங்காது!
எழுதிஎழுதி என்
தலையில் சுமத்திய
சுமைக்கூட்டமாய்
கனம் பெற்று
வாழையடி வாழையாய்
வந்த பெருங்கூட்டம்
தலையைச் சுற்றிச்சுற்றி
பேயாய்ச் சுழலும்
எண்ணிறந்த கூச்சல்கள்
உபதேசங்கள்!
உருவிலடங்கா உருவங்கள்
கனவிலடங்கா கனவுகள்
சுழலும் பற்சக்கரங்களாய்
எப்போதும் நினைவை
நெறித்து இயங்கும்

நிஜங்களாய்ப்
பொய்யாகும்
பிம்பங்கள்!
பிம்பங்களை அறுத்துச்
சுடரும் தீப்பொறிகள்
நினைவை மறக்கவைக்கும்
கனவுகள்
கனவுகளை மறக்கடிக்கும்
நினைவுகளாய்
எழுதவிடாமல் சுயம்
இழக்கவைக்கும்
சுயங்கள்!
இனி எழுத என்னை விடாமல்
துளைத்து
இனி எழுதாமலிருக்க
என்னை எழுதவைக்கும்
துணிச்சல்கள்!

●

உரு

கருத்தைச்
சொல்ல
இனிக்கவிதையால்
கூடாது!
மொழிசாகும்!
கலை இருண்டு
உள்ளம் முங்கும்!
கனவு சிதறும்
கருத்து கவிதையால்
குருடாகும்

போதும் -
இனி சும்மா
இரு!
கவிதை அதுதான்

கருத்தைக்கருத்தால்
கொல்ல
முயலாதே
காலத்தைக் கொல்ல
எதற்கு
கவி ?

போதும்
இனி சும்மா
இரு
கவிதை
கனவாகி
நெஞ்சில் நிழல் பரப்பி
தேனாய் நீயாவாய்

கவிதையும் கலையும்
தோற்கும்
மௌனத்தைப்
புணர்!
கனவைக்கொல்!
நிஜத்தை நீயாக்கி
நினைவைநேராக்கி
உருப்பெறு!!

●

நமக்குள்ளே

பாரதிக்குப்பின்
எழுதாதவனே
இங்கே
கவி!
என்றார் விமர்சகர்

புதுமைப்பித்தனுக்குப்
பின் எழுதாதவனே
புதுக்கவிஞன்
என்றான் நண்பன்!

வானம் பாடிகளுக்கு
முன்பாடியவர்கள்
பறவைகளேயல்ல
என்றார் முற்போக்கு நண்பர்

பிச்சமூர்த்தியும்
கு.ப.ராவும்
தனியுடமை
பாடியகவிஞர்
என்றார் வைரக்கவி!

புதுசு பாடினும்
மரபைப் பிளந்தாலும்
ஒட்டுப்போட்ட துணி
விரித்தாலும்
மனிதனைப் பாடட்டும் போதும்
என்றார் மனிதாபிமானக் குஞ்சு ஒருவர்!

பாரதிக்குப்பின்
எங்கள் மஹாகவியே
கவியென்றனர்
இலங்கைச் சோதரர்!

கவிதையெனும் தேவீ!
தமிழ்தழுவி

உன்னை உரித்து
நிர்வாணமாக்காத
தமிழ்க்கவிஞன் இங்கே
எவன்?

ஐந்தரைக்கோடி
தமிழரும் கவிஞரே!
என்ன பயம்!
இங்கே கவியல்லாதான்
எவன்?

பேசுவதெல்லாம் தமிழெனின்
தமிழெல்லாம் கவிதைதானே!

பாரதியைக்கொன்று
புதுமைப்பித்தனைச்சாகடித்து
கு.ப.ரா.வைச் சந்தியில் நிறுத்தி
தமிழ் நமக்குச் சொல்வதென்ன?!

பொதிகைப் பிளந்து
சோழனும் பாண்டியனும் சேரனும்
பாடிப்புலம்பியச் செந்தமிழ்
அனல் கடந்தும்
புனல் நீந்தியும்
கவிதையை மட்டும்
கடக்காமல்
கூனிக்குறுகிக்
மண்டையைச் சாய்த்து
வெள்ளையடிக்கப்பட்ட
வெறும் கல்லறையாய்
வறண்டு
நிற்பதேன்

●

பூனைகளுமில்லை

கவிதைக்கு
நேரமில்லை
காரணம் புதுக்கவிதை!

வரிசையாய் வாக்கியத்தை
முறித்தெறிந்த கலைசல்
எழுதவந்தஎத்தர்களின்
எழுதத்தெரியாக்குமைச்சல்

கோவேறுகழுதை
பெஸரட் பாசிப்பருப்பு தோசை
என்றார்கள்

புதுக்கவிதையைப்
புதுமைப்பித்தனைப் பிச்சமூர்த்தியை
நானும் இப்போது
முப்பத்தைந்து வருடங்களுக்கும் பின்னர்
முன்னும் பின்னும்பார்த்து
இருட்டுப் பூனையின்
கறுப்புக்குகையைத்
தேடுதேடென்று தேடுகிறேன்

புதுக்கவிதைப்பூனைகள்
இப்போ ஏராளம்
வார்த்தைச்சிலந்தியும்
கவிக்கூளமும் இன்று
ஜாஸ்தி!
எடுத்து எழுதும் எதுவும்
கவிதையே!

இருட்டுக்குகைக்குள்போக
எந்தரசிகனும்
இன்றில்லை ஏனென்றால்
கவிதை என்றும்
குகையல்ல
பூனைகளோ திருட்டுப்
பூனைகள்

பூனைகளுமில்லை

கவிதைக்கு
நேரமில்லை
காரணம் புதுக்கவிதை!

வரிசையாய் வாக்கியத்தை
முறித்தெறிந்த கலைசல்
எழுதவந்தஎத்தர்களின்
எழுதத்தெரியாக்குமைச்சல்

கோவேறுகழுதை
பெஸரட் பாசிப்பருப்பு தோசை
என்றார்கள்

புதுக்கவிதையைப்
புதுமைப்பித்தனைப் பிச்சமூர்த்தியை
நானும் இப்போது
முப்பத்தைந்து வருடங்களுக்கும் பின்னர்
முன்னும் பின்னும்பார்த்து
இருட்டுப் பூனையின்
கறுப்புக்குகையைத்
தேடுதேடென்று தேடுகிறேன்

புதுக்கவிதைப்பூனைகள்
இப்போ ஏராளம்
வார்த்தைச்சிலந்தியும்
கவிக்கூளமும் இன்று
ஜாஸ்தி!
எடுத்து எழுதும் எதுவும்
கவிதையே!

இருட்டுக்குகைக்குள்போக
எந்தரசிகனும்
இன்றில்லை ஏனென்றால்
கவிதை என்றும்
குகையல்ல
பூனைகளோ திருட்டுப்
பூனைகள்

உறிமேலேறி
அடுத்தவீட்டுப்பால்குடித்து
கூரை மேல் திரியும்
திருட்டுப்பூனைகளையல்ல
நான் குகைப்பூனையைத்
தேடுவதுண்மை
திருட்டுப்பூனைகளையல்ல!
இவைகள் பூனைகளுமல்ல!

●

யாராகும் ஒன்றிப்பு...!

பாபாஜான்!
நீ திருவனந்தபுரம்
கோல்ட் லில்க்ஸ் ரோட்
கவடையார் ஈஸ்ட்
மூலை மைதான வீட்டில்
இன்னும்
கவிதை எழுதும்
ஈசான மூலை
எனக்குத் தெரியும்!

உன் சகோதரி!
உன் நகுலன்
உன் கறுப்பு!
உன் குப்பிச்சாராயம்
உன் சைக்கிள்
உன் சுசீலம்
உன் வேலைக்காரி
உன் நவீனன்
உன் பகரஈகாரம்
உன் அகம்
உன் புறம்
உன் உள்

எல்லாம்
எல்லாம்
எனக்கும்
பரிமாறி
பகா்ந்து
அகண்டு
அகிலமாய்ப்
புணா்ந்து
முட்டியுடைந்து
எனக்கே
எனக்காய்
விரிந்து போயிற்று

பாபாஜான்
இனிச்சொல்லாதே
சாவேன் என்றும்
வாழ்வேன் என்றும்

லேசில் நாம்
பிரிய மாட்டோம்
ஒன்றவும் மாட்டோம்!

●

சலித்தல் - அசைவாடல்!

பாபாஜான்
உனக்கு வாழச்
சலிக்கவில்லையா?

கோரமான இந்த
எழில்
தின்றும் காலைப்போதும்
இலைகள் உதிரும்
உச்சிப்பொழுதுகளும்
என்றுமே ஓடி ஒரே
மாதிரியான
மடங்கிப்போகும்
மாலைச்செந்தூர்
இருட்டும்
இருளும்
ஒளிதேறும்
பின்னிரவுகளும்

தேவைகள்
மீதூற அதைப்
புணரும்
மனைவியையும்

குழந்தை நாறும்
பால் மணமும்
சோறு மணக்கும்
மனைவியின் சேலை
குழம்பு கீரை
கமறும் பாவாடை
வியர்வை ஊறிய
விடியலில் குளிரும்
கனவுகளும் நடுங்கி
கவிதை வாடை
துடை நடுங்கும்
காலை ஊத்தையும்
உனக்கும் சலிக்கலையோ?

சலித்துச் சலித்துச் சலிக்கும்
வாழ்க்கை இடையறாது
சுழலும் அதன் சக்கரம்
ரத்தம் சிதறும் அதன்
வேகத்தொடு
பாபாஜான் உனக்கும்
எனக்கும் எப்போதும் சலிக்கும்!

●

பொழய்க்கிற கவிதை

எம் பொண்டாட்டி சொன்னா
நீ பொழைக்கமாட்டையா!
சரிதான்அது!
ஆனா அவ பொழைச்சாளா?

பாபாஜான் உனக்குத்தெரியுமா?
எனக்கு இன்னும் கூட
பொண்டாட்டி கூட
பொழைக்க தெரியாதுன்னு?

பொஸ்தகம் படிக்கிறது
பொஸ்தகம் எழுதுறது
கவிதைகட்றது
மூலைல ஒக்காந்து
புகையிலை சுருள் உடுறது
பொம்பள கையால
சொகப்படுறது
பசியோடு பசியா
சமைக்கிறது
அப்றம்
எல்லாரும் ஒக்காந்து
ஒன்னா சாப்புடுறது
ரெண்டு சக்கர உருளியில
உருண்டுருண்டு
உலகத்தயில்ல
ஊரயே ரவுண்டடிக்கிறது
அப்பப்ப ரெண்டுகாசு
யார் தலையிலயாவது
மொளவா அரக்யறது
ராத்ரி பொண்டாட்டிட்ட
சேலயில அடங்கிபோறது
இப்டி பாபாஜான் தேடி
வரிவரியாய் உருள்றது

இதெல்லாம் பொழக்யறதுல
சேராதா பாபாஜான்.

●

பாபாஜான் ஏன் கவலை

பாபாஜான்!
ஏன் கவலை?
கவிதையிருக்கு!
பசியும்
பட்டினியும்
கவிதைக்குக்
காத்திருக்கும்
கணப்பொழுதும்
கையிருப்பாய்
என்றுமிருக்கும் போது
ஏன் கவலை?
நாம் கவிதையாகி விட மாட்டோமா?
பாபாஜான்!
மேரே
ஜான்!

●

சாவோம்!

பாபாஜான்!
நீ அதிருஷ்டக்காரன்!
நெறைய அநுபவிக்க முடியறது
வாழும் போதே சாவை சிலாகிக்கிறியேப்பா?

நகுலனைப்பாரேன்
குப்பி!
கறுப்பு!
இலக்கியம்!
அட
சுசீலா!
அப்புறமாக் கூட
குப்பி!
வாழறது அவருக்கு
அப்படியொண்ணும் பெரிய இடைஞ்சலா இல்லை!

நீ அனுபவிச்சு சொல்றேப்பா
அப்படி ஒண்ணும் லேசிலெ
சாவு வராதுன்னு!

பலே!
நகுலனும்
நவீனனும்
பாபாஜானும்
வார்த்தெயெப்போட்டு
நீஞ்சிண்டே போய்டுவா
அவாளோட
வார்த்தையே
சாகறதில்லேன்னா
அவா எப்படிச்
சாகப்போறா?!

நானும்
நகுலனும்
நவீனனும்
பாபாஜானும்
எப்பவும்
இப்டியே
சாவோம்தான்!

●

பதம்

சிதம்பரத்தில்
கால்தூக்கி ஆடும் நடேசன்
கொசுத்தொல்லை தாங்காத
பிடுங்கலினால்தான்
கால்தூக்கி நிற்கிறான்
என்றார் க.நா.சு

தூக்கிய காலைக்
கீழே
வைக்காமலிருக்கிறானே
நடராஜன்
கொசுவுக்குத் தெரியாதா?
ஊன்றிய ஒற்றைப்
பாதத்திலும் கடிக்க?

இருகால் ஊன்றியே
யார் ஓடமுடியும்?
மாற்றி மாற்றி
ஒன்றை ஊன்றும்
வித்தையில் மனுஷனை
ஆட்டுவிக்கும்
அலகிலா விளையாட்டு
கொசுவுக்கும் உண்டே!

இரண்டையும் ஒருங்கே ஜெயிக்க
இங்கேயும்ஒருக்கால்
மனுஷன் போதும்
என்றுதானோ நடராஜன்
எங்கும் போகாமல்
சிதம்பரத்தில்
என்றென்றும்
நின்று போனான்?

●

வாழ்வும் சாவே!

க.நா.சு. போயாச்சு!
ரொம்ப நல்லதாச்சு!

பாபாஜான்
உனக்குத் தெரியுமா?
ரொம்பபேருக்கு
யோசிக்கவே வராது என்று!
ரொம்பபேருக்கு
நல்லது தேடிப்படிக்கத் தெரியாதெ!
தெரியுமா? அவர்தான் சொல்வார் அப்படி!

க.நா.சு. ரெண்டு மூணுஸ்வீட்
ஏக நேரத்தில் சாப்பிடுவார்!
காப்பி என்னமோ அவருக்கு
இனிச்சிண்டே கசக்கணும் நல்லா
கசந்துண்டே இனிச்சாகணும்

இலக்கியம்ன்னா பாவம்! அவருக்கு
உணர்ச்சி வசப்பட்டு வழியப்படாது

கவிதைன்னா அட! க.நா.சு.வுக்கு
புதுக்கவிதைன்னாலும் கவிதையா ஒலிக்கப்
படாது!
பாபாஜான்
ஆமா
அவருக்கு வாழ்க்கைன்னா கூட
அவர் வாழ்க்கை மாதிரி இன்னொண்ணு
இருக்கப்படாது!
வாழறது ஒண்ணு ஒண்ணும்
புதூசா ஒவ்வொரு நாளும்
கசக்கணும்! சிக்கலாயிருக்கணும்
விடுவிக்க ஏலாததா!

ஆமா கோணா மாணான்னுதான் இருக்கனும்
பாபாஜான் - உனக்கு
நகுலன் சொல்றா மாதிரி அப்டி ஒண்ணும்
ஓடனே வாழ்க்கை நமக்கெல்லாம்

க.நா.சு. 'து' மாதிரி ''படக்''ன்னு
முடிஞ்சுறாது!
தெரியும்

வாழ்க்கை மாதிரியே அவருக்கு சாவும்
உணர்ச்சி வசப்படுத்தாமை
கடைசி வரைக்கும் ப்ரக்ஞையோட
விமர்சிக்கவே முடியாத
''புதுஸ்ஸா'' இருந்திருக்கு
எழுதிகிட்டே
சாவையும் வாழ்ந்திருக்கார்!

●

போக்கு வரவு

பாபாஜான்
நீ இருக்கையா?
இல்லியே!
க.நா.சு. இருந்தாரா?
இல்லியே!
இருந்ததா எழுதினார்
நவீனா
நீயும்
ராமநாதனும்
இருக்கேளா?
எழுத்து பிரிஞ்சு
வார்த்தை உடைஞ்சு
வாசகன் மூளை
திரிஞ்சா
நீங்களும் இல்லெ
ஆமா
நகுலன்
நான்
வாசிக்கிற
நீ
எல்லாரும்
இருந்துண்டிருக்கோமா?
இருந்துண்டிருக்கறதா
நெனைச்சிண்டிருக்கோமா?
நிஜமா
க.நா.சு.போய்ட்டாரா
பாபாஜான் நீ
இல்லாமலா போய்டுவேன்
க.நா.சு
என்னிக்கும்
இருப்பார்
இருந்துண்டேயிருப்பார்
எழுதாட்டாலும்
இருப்பார்
வாசிக்காட்டாலும்
எழுதாட்டாலும்
நாம் மட்டும் என்ன
இல்லாமலா
போடுவோம்?
பாபாஜான்
நாம்ம எப்பவும்
நிப்போம்
போய்ட்டாலும்..!

●

நகுல!

நகுலனுக்கும்
பாபாஜானுக்கும்
என்னைத் தெரியாது

க.நா.சுவுக்கும்
செல்லப்பாவுக்கும்
பாபாஜான் தெரிந்தாலும்
இலக்கியம். அது!

எனக்கும்
நகுலனுக்கும்
பாபாஜான்
போதும்

அதிலும்
எனக்கோ
பாபாஜானும்
இரவும்
ஓர் இரவின்
ஒரு பெக்
விஸ்கியும்
இருமலும்
உதறலும்
ஒரு சிட்டிகை
கறுப்பும்
போதும்

நகுல!
க.நா.சு இல்லாவிட்டால் என்ன
நமக்கு
பாபாஜான் இருக்க!

●

கவி

பாபாஜான்!
எங்கிருந்தாலும்
நானும் நீயும்
என்றுமே இப்படித்தான்
புகைவோம்
க.நா.சு இல்லாத
வேளைகளை யாரிடம்
புகைக்க?
புகையுமா எல்லாம்?
க.நா.சு
விமர்சகராம்!
சொல்கிறது டி.வி
பாபாஜானுக்குத்
தெரியுமே
இதெல்லாம்
என்றைக்கும்
இப்படித்தானென்று
நாம் சாகப்போவதை
என்றுமே சொல்லிக்
கொண்டிருக்கும்
நம் எழுத்து
எப்போதும்
எந்தக் கணத்திலும்
கடன் தான்
தீராத கடன் தான்
ஆனால்
நீ இலக்கியமாம்
சொல்கிறார்
நகுலன்
கவிதையால்
பாபாஜான் நீ
சாஸ்வதம்
நானும்
நீயும்..??

●

சாவுகள் வாழ்கின்றன

சித்தக்குருவி
கவிவழி பறந்து கொண்டிருக்கிறது

சாக்ரடீஸ் செத்தார்
புத்தர் பண்றிக்கறிமென்று புழுத்துப் போனார்
ஏசு குத்துண்டு கொலையுண்டார்

ஜைனர்கள் பூச்சிகளாகவும் கீடகங்களாகவும்
மாறிப் போனார்கள்
மேதாவிகள் மூலையில் அமர்ந்து மோனம் பார்த்தனர்
தமிழறிஞர்கள் தமிழைக்கட்டிக் கொண்டு உள்ளதையும் கைவிட்டனர்...

க.நா.சு.வும் புதுமைப்பித்தனும் கு.ப.ரா.வும்
செத்துக் கொண்டே இருந்ததைப்
பார்த்துக் கொண்டே இருந்தோம்

சாவுகள் வாழ்கின்றன
வாழ்க்கைகள் நசிக்கின்றன
நீயும் நானும்
ஏமாளிக்கும்பல்

●

எரியூட்டு!

வேலையென்னவோ
மிகுதி ...
உழைக்கவோ
மக்களும் அளவில்லார்

மனமோ.....

உழைப்போ
கணக்கற்றுப் பெருகி
மிதக்க ...

கண்களில் பசியும்
கால்களில் புழுதியும்
வயிற்றில் தீயும்
நெஞ்சில்
வளரும்
ஆசைகளுமாய்
ஒருவன்!

நூற்றாண்டுகளாய்
ஒருவன்
காத்து நிற்கும்
எரிநெருப்பாய் என்றும்
ஒருவன்!

●

தீச்சூளை

உருட்டுக்கட்டை
என்னைப்பார்த்துக்
கொக்கரிக்குது

அட உனக்கு மட்டுமில்லையா
மனிதாபிமானம்?
தேசபக்தி
ஒரே உலகம் ஏகமதம்
நடுவுநிலமை ஆசை!
உலகம் உய்ய
ஒரெ ஒரு வழி
உனக்குமட்டும் தோணாதா?

தாழ்த்தப்பட்டவன் மேலேவர
ஒரு சுருக்குவழி!

கனவைப் பிளந்து
வயிற்றை நிரப்ப ஒருபிடி
அரிசி!

காலத்தைத் தாண்டி
உலகத்தை சுற்றி எரிய
ஒரு சுருக்குக் கயிறு

கெட்டதெல்லாம் ஒழித்து
நல்லதை விளக்காய் எரிக்க
ஒரு தீப்பெட்டி!

ஞானத்தை மேலேற்றி
அஞ்ஞானத்தைச் சாய்க்க
ஒரு பட்டாக்கத்தி

நிஜத்தை உடைத்து
உள்ளத்தை ஊன்ற
ஒரு மனுஷ்யன்!

பொய்யை மாய்த்து
அந்தக்கரணத்தை ஏற்ற
ஒரு மனுஷி

புத்தகங்களை எல்லாம்
கொட்டிக்கொளுத்தி
தத்துவத்தை எல்லாம்
புதைத்து மூடிமிதிக்க
ஒரே ஒரு பாதம்!

அட!
அழத்தொழித்து
கொளுத்தி எரித்து
சாம்பலாய் ஊத
உனக்குள் இல்லையா
ஒரு தீச்சூளை

உருட்டுக்கட்டை
என்னைப்பார்த்துக்
கொக்கரிக்குது

உருட்டுக்கட்டையை
எடுக்க எனக்குக்
கைகள் இல்லை!
கனவும் இல்லை
காலமும் இல்லை

●

கிழங்கள்

விடிகாலை
ஜன்னல் வழியே
சூரியக்கிழவி
எட்டித்தொட்டாள்

கிழவியின் சூடு
கொஞ்சம் அதிகம்தான்
எரியும் காலை
எல்லாருக்கும்
வேணும்தான்!

கிழவி நிமிர்ந்தபோது
உச்சி
ஆ!
கிழவி சுட்டுத்தான்
எடுத்தாள்
அணைத்து உருக்கினாள்
வியர்வைச் சகதியில்
ஊடல்!

மதியவேளையில்
மயக்கம்
உச்சியில் அடித்த
கிறக்கம்

கிழவிக்கும்
காமசாஸ்த்ரம்
புரியாதா என்ன

சுருக்க நரையுடன் சூர்ய
முடி முளைத்த முலைகளை
என் மார்பில் அழுத்தி
புணர்ந்தாளே

கிழவியின் மாலை
கூட கசகசத்துத்தான்
கடித்தது

மாலை கடந்து பின்னரும்
கிழவி விடாது அந்திவரை
கிழக்கைப் புணர்ந்தாள்
மேற்கில் புதைந்தாள்
அப்ப்ப்ப்பா!
விடிந்து வடிந்தது

மேலான இரவு
தென்றல்! இருட்டு
கனவின் பிசுபிசுப்பு
நிலவுக்கிழவி
எப்போ வந்தால்தான் என்ன?
வரட்டுமே!

அநுபூதி

உதடுகளைப் பிதுக்கி
இவ்வளவுதானா நீ!
என்றாள் காமாட்சி

இதுகவிதையா
வெறும் கூச்சல்
என்றான் முருகேசன்

பிழைக்க ஒருவழிகாண
இத்தனை வருஷ
குப்புற வழிசல்தானா
என்றாள் மங்கையர்க்கரசி

இன்னும் ஆழம்போ
மேல்பாக நீச்சல் வேண்டும்
கனவை நனவாக்கு என்றான் க.நா.சு

உள்ள ஒண்ணுமுள்ள
வெளியே வந்து
என்ன பாத்தேன்னு சொல்லு என்றான்
எம்.வி.வெங்கட்ராம்

அட பேக்குப்பயல!
எதுக்குடா சொல்லப் பாத்த
எல்லாத்தையும் சொல்லுவாளா
வாண்டாம் சொல்லாதேங்குறான்
சம்ஸ்க்ருதன் தேவநாததாத்தாச்சாரி

படுத்துப் பொறண்டதெல்லாம்
நக்கற வரைக்கும் நக்கிப்புட்டு
வெளிய வேறசொல்றது என்னா பழக்கங்குறாளுவ
க...முன்டையவோ

அண்ணா.... எல்லாம்தெரியும்ன்னாங்குறா
தங்கச்சி கண்மணி

சொன்னா தலைதப்புனது
தம்புராம் புண்ணியங்குறா
ஜோதி மாஷா

எழுதுங்க ஆசானே
எழுதுங்க எழுதுங்கங்குறான்
சீடன் கவிஜீவன்

எழுதவேமாட்டேங்குறிங்க
ஒங்கலன்னு சொன்னார்கள்
கோமலும் வண்ணநிலவனும்

எழுதாதே போதும்னான் வச்ரவேலுவும்
காலம் முழுக்க
தேடுனதெல்லாம்
என்னத்துக்கு.

●

உபாதை

ஆளரவமற்ற பாதை!
நீண்டு சடைத்துயர்ந்த ஆலமரங்கள்
ஆயிரம் கை நீட்டிக்
கீழூன்றிய விழுதுகள் இருபுறமும்
நீண்டு படர்ந்திறங்கும் பாதை
முன்னே நீண்டு ஓடும்
பின்னே வழுக்கிச் சுருளும் பாதை!

எங்கே போகிறது
எங்கிருந்து வருகுது
எதுவுமே புரியாது
பாதையின் நீட்சி
என்றும்போல் படர்ந்து கிடக்குது
இருட்டிய வேளையிலும்
பாதையின் நீட்சி குறைவதில்லை

காலைப் புலரில்
கதிர் கதிராயிறங்கும் பனியிலும்
நடு உச்சிச்சுடர் பொறியும்
கடுமையிலும் பாதை என்னமோ
பாதை தான்

நடக்கும் பாதங்களும்
விரிகுளம்போசைகளும்
தார் ஊற்றி விரித்த
நவீனத்தில் அறைத்துருளும்
ரப்பர் டயரோசையின்
அதிரலிலும் பாதை நீண்டு கிடக்குது

நெஞ்சில் விரிந்த பாதையில்
கால்கள் இயங்குவதில்லை
எனினும் காலடியோசை
எப்போதும் கேட்குது!

ஆளரவமற்ற பாதை
ஆளரவம் நேரும் போதும்
பாதைக்கேதுபாதை!?

●

கலை

கடனுக்கலைந்தநாள்
பல!
கனவுக்கலைந்ததுபோல்
கடனுக்கலைந்தாலும்
கடன் கலையாமோ?

கலையும்
தேடலே
தேடலே உயிர்
தேடி விஞ்ஞானக்
குகைக்குள் தப்பித்தடமாடி
நுழைந்ததும்
தேடல் சாத்தியமாயினும்
சாதனை இல்லை

கவிக்குகையின் ஈரத்தில்
ஒளிபிளிற்றும் மனசு
வாழ்வின் இருட்டில்
நடமாடக்கூடவில்லை

நெஞ்சை எரித்துச்சத்தியம்
குண்டாலும்
வாழ்வின் ஏழ்மையில்
வியாபாரம் கூடவில்லை

ஓவ்வொன்றுக்கும் ஓர் விலை
வாழ்வின் முட்புதர் சாடித்
தப்பிஜெயிக்க தந்திரம்
கூடவில்லை

பொய்யாய் வாழ்ந்து
அதிலேயே நிஜத்தைக்காண
எந்திரம் ஓடவில்லை

கடனே மீதி எங்கும் பாக்கியே
நீதியாச்சு
கடனைத்தீர்க்கநாள்போதவில்லை
கடனை மீட்க கையிருப்பு இல்லை
கவிதையை வாங்க ஆளில்லை
கடனே மீதியாய்
கலையாச்சு.

•

கானலங் கானல்

கண்
இருண்டு போகும்வரை
தெரியுது
கானல் மட்டும்!

கால் தளருது
உடல் சரியுது
ஆவி துடிக்க
நெஞ்சு கருகுது
யாருமில்லாக்
கானலிலே
கால்பரப்பி
நின்றாலும்
நடந்தாலும்
பயமென்ன?

தெரிவது
கானலின்
நெளியலை
வீசும்
அனல் மட்டும்!
சுடுங்கால்
நெடு வெளி
திட்டுத்திட்டாய்
வழியும்
அனற் பிழம்-போடை!

தணற்குழம்பு
நெஞ்சிற் கலந்து
உடலிலும் உருகி
உள்ளூடு வழியும்
விசித்திரம்

தலைமுடி கருகி
விழியிமை தீய்ந்து
நாசியின் முடிகள்
அனலாய்ச்சிவந்து

காலம்
நிலைக்க
நிமிடமும்
கருகி
நேரம்
துணுக்குற
நாளும்
வெந்து
கணமும்
கணமும்
உயிரை
எரிக்குது
வாழும்
கானல்

வாழ்வின்
கனவுகள்
அப்போதே
எரிந்து
நிஜத்தைச்
சுட்டெரிக்க
நிஜங்கள்
நிழலாய்
வடியும்
கானல்!

இருக்கும்
கவிதைக்
கதவை
மூடி
வாழ்வின்
நினைப்பைத்
தைக்கும்
கானல்!

நிஜத்தை
மறக்க
கனவைத்
தேடினும்
நாளும்

நிஜத்தைத்
துறக்க
வழிதனை மூடி
உள்ளும்
வெளியும்
பரவும்
கானல்!

நண்பரைத்
தேடினும்
பெண்
உறவைத்
தேடினும்
உற்றுப்
பெற்ற
தாயைத்
தேடினும்
மீள்வது
கானல்!

நெஞ்ச
மேட்டினில்
புதைத்த
மனதைத்
தேடினும்
வானமுகட்டில்
ஏறிஅறிவின்
உச்சிஏறி
அதனைத்
தேடினும்
உடலைப்பிளந்து
உயிரினை எட்டும்
ரசாயனம்
கண்டு
உயிரை
அனைத்தும்
பெறுவது
கானல்!
கானலங் கானல்!

●

பீமுற்றம்

எங்குப் பார்த்தாலும்
மலம்
அறிவுமலம்
ஆணவமலம்
கண்மலம்
உருட்டுமலம்
பச்சைமலம்
காய்ந்தமலம்
நின்மலம் வேண்டும்
எனக்கோ சூழலும்
மலம்!

காலை நேரத்திலோ
மலமலை சுமக்குது
என்காலம்!

காலம் சொல்லுது
மலமென்று ஏதுமில்லையென

வேதங்கள் புகலுது
மலத்தை நீக்க
நீ மலமாக வேண்டுமென

மனைவி சொல்கிறாள்
நீயே மலமென

●
தர்மம் சொல்லுது
நீக்க முடியாதென

என் மலத்திலிருந்து
நான் மீறி
நீயாக வேண்டுமென்கிறான்
வெங்கடாஜலபதி

சாம்பலாகு எரிந்து
என்கிறான்
பொட்டைச்சிவன்

மலமென்பதேது
என்கிறான் புத்தன்

மலத்தைப் புசி
மன்னிக்க
நானிருக்கும் போது
மலமாவது கிலமாவது
என்கிறான்
பாவி ஏசு!

எல்லா மலமும் பீயாகிக்
காற்றில் கடைசியில்
தீயாகிப் பறக்கும்
என்கிறான்
சுடலைமாடன்

நானும் சுடலைமாடனும்
இப்போது
பீமுற்றத்தில்
நடராஜனோடு
நாறியபடி
நடனமிடுகிறோமடா
கவிஞனே!

●

உருப்படி

ஏற்றி வைத்தேன்
அணைந்தது!

உருட்டி வைத்தேன்
உதிர்ந்தது!

தழுவிவிட்டேன்
வழுவியது!

கொடுத்து வைத்தேன்
மறைந்தது!

எண்ணி வைத்தேன்
மறந்தது!

எழுதி வைத்தேன்
அழிந்தது!

செதுக்கி வைத்தேன்
உடைந்தது!

படைத்து வைத்தேன்
நசிந்தது!

என்னில் மீதம்
இருந்தது
என்ன?
ஆவல்!
தாகம்!
ஆர்வம்!
ஆசை!
எரியும்
தீ!

●

பால்..!

முலைக்கண்
திறந்த
நாள்..!

என் கவிதைக்
கண்
முளைத்த நாள்

என் கவிதை
நாள்
வருகுது
முலைப்
பாலாய்!

வரும்
வரும்
என்
நாள்!

●

வெளியே சமுத்திரம்

ஆம்
என்னை எட்டுது!
என் சமுத்திரம்

பறந்து விண்ணைக்
கிழிக்குது என்
காற்றுச்சிறகு

வானம் குழைந்து
என்கீழே
பதுங்குது

இருட்டு என்னைக்
குடைந்து
ஒளியைப்
புரட்டுது

என்னை என்
சமுத்திரம்
எட்டியபோது
இத்தனையும்
இத்தனையும்
எத்தனையும்
நிஜமாகுது
என்
கவிதைக்குள்ளே

அட
வெளியிலும் தான்
வெளியிலும் தான்
வெட்ட
வெளியிலும்.
நடுவில்
இருக்குதொரு
வாசல்!

முன்னுமில்லை
பின்னுமில்லை
நடுவில்
பிளந்து
கிடக்குதென்
பாதை

புத்தனும்
நடுவில்தான் பிறந்தான்
வாழ்வை
இரண்டாகப் பிளக்க
ஒடித்துத் தள்ளி
நடுவில்
திறந்து கிடக்குதொரு
வாசல்
ஒம்பது வாசல்.

●

நாம் பிறப்போம்

இதுவரை
வந்த உன்னை
மறுக்க உனக்குத்
துணிவுண்டோ?

வாழ்வென்றும்
கட்சி என்றும்
மதமென்றும்
இலக்கியமென்றும்
நீ
வளர்ந்த
உன்னை மறுத்துச்
சுட்டெரிக்கும்
எரியூட்டுக்கு
நீ தயாரா?

தாயெனும்
பால்குடித்து
தந்தையின்
ஊட்டலே உண்டு
அரிசி பால் காய்கறி
கிழங்குகளால்
ஊர்வன பறப்பனதின்று
வளர்த்த
உன் ஊனினை
நீயே தின்று
எலும்புக்களை கடித்து
விழுங்கிவிடும்
பசி உண்டா
உன்னிடம்?

கனவுகளை நிஜமாக்கி
பெண்ணின் உடலை
இன்பமென
ஆணின் கீழடங்கும்
பெண்மை நிஜமென
மகிழ்ந்த

சுகத்தை
மறுத்து உடலைப்பிளக்கும்
கோடரி உண்டோ?

நிஜங்களையும்
பொய்களையும்
வாழ்வின்
ஆழங்களைப்
புணர்ந்து
அதன் ஏமாற்றை
இன்மையை
ஓவ்வாமையை
ஒப்புக்கொண்டு
ஆமாம்
எதுவும் இல்லை
என்னவும்
இல்லை என்பதைச்
சொல்ல உண்டா
ஒருசொல்?

எந்தப் பெரிய
தத்துவமும்
இங்கே
தன்னை மறுத்ததில்லை
தன்னைப் பிளந்தெறியும்
துணிவிருந்ததில்லை
தன்னை மறுக்கும்
துணிச்சலை
எங்கும்
காணவில்லை!

உன்
கையிருப்பைக்
கீழே
எறி!
தத்துவத்தை
உடை!

உன்
சாமியை
நடுவகிடெடுத்துப்

பிள!
அ னாவிலிருந்து
நீ படித்து
அக்கன்னாவரை
புரிந்து நம்பிய
எல்லாவற்றையும்
சிதை!
சிறாய் சிறாயாகப்
பிளந்து
எறி!
இதுவரை உலகைச்
சுழற்றும்
அச்சினை
முறி!
பொய்ப்போதங்களை!
உன்னை முற்றாய்
கனவு கொண்டு
கொளுத்து!
இருக்கும்
கூளங்களை எல்லாம்
அதிலே
கொட்டு!
நீ மட்டுமல்ல
நாம் பிறப்போம்.

●

என்றோ எழுதிய கனவு

உள்முகம்

வ.எண்.	தலைப்பு		பக்கம்
1.	நிலை வை!	...	13
2.	லிங்கா	...	14
3.	எல்லாமெ வெளிச்சம்	...	15
4.	கனவு மரம்	...	17
5.	பழுப்பு	...	18
6.	வின்னம்	...	19
7.	நானில்லை	...	21
8.	இவன்	...	23
9.	தூசிபடலம்	...	24
10.	சுயம் நலம்	...	25
11.	சோரம்	...	26
12.	இருப்பு	...	28
13.	சருகப்பூ	...	29
14.	சிகர சாகரம்	...	31
15.	ரூபிதயா	...	33
16.	மருட்பூ	...	34
17.	ககனத்தே	...	35
18.	எங்கே	...	36
19.	ரத்தத்துளியில் சுடரும் கனல்	...	37
20.	மௌனத்தில் முழங்கும் பேரொலி	...	38
21.	ஜோதி சாசனம்	...	40
22.	விஷ வைரம்	...	41
23.	கால் பெருவிரல் கொலுசு	...	43
24.	பொய்க்கனவு	...	44

25.	இணக்கு	... 45
26.	சதுர்	... 47
27.	நனைந்த மாலைகள்	... 48
28.	கண்மணி!	... 49
29.	உடலும் பிரியுமா	... 51
30.	ரத்தம் ஒன்றும் கனல்	... 52
31.	ஓம்	... 54
32.	தாச்சுகிட்டா	... 57
33.	நிதி	... 58
34.	ஐந்து	... 59
35.	நிர்வஹணம்	... 61
36.	நீயாவது	... 62
37.	உலர்புஷ்பங்கள்	... 63
38.	கூவம்	... 65
39.	வாழ்க்கை	... 67
40.	தொழில்	... 68
41.	குறி	... 70
42.	விடிவும் படிவும்	... 71
43.	நீ ஏன்... நீ எதற்கு...	... 72
44.	கூடம்	... 73
45.	வாழ்வின் பாம்புக் குறிப்புகளிலிருந்து	... 75
46.	தன்மை	... 78
47.	எனக்கும்	... 80
48.	விச்வம்	... 82
49.	சூதும் வாதும்	... 83
50	கவிச்சி	... 84
51..	வசம்	... 86
52.	வெறுமை	... 87
53	ஒன்றின் ஒன்று	... 88
54..	காணாக் கவிதை	... 89
55.	பூவும் பூச்சியும் கவிதையும் நீயும்	... 91
56.	பீடி	... 93
57.	கவிதையிலில்லை	... 94

58. எனக்கு மேலே கீழே உள்ளே வெளியே ... 95
59. உரு ... 98
60. நமக்குள்ளே ... 99
61. பூனைகளுமில்லை ... 101
62. யாராகும் ஒன்றிப்பு ... 103
53. சலித்தல் அசைவாடல் ... 105
54. பொழய்க்கிற கவிதை ... 107
65. பாபாஜான் ஏன் கவலை ... 108
66. சாவோம் ... 109
67. பதம் ... 110
68. வாழ்வும் சாவே ... 111
69. போக்குவரவு ... 113
70. நகுல ... 114
71. கவி ... 115
72. சாவுகள் வாழ்கின்றன ... 116
73. எரியூட்டு ... 117
74. தீச்சூளை ... 118
75. கிழங்கள் ... 120
76. அனுபூதி ... 122
77. உபாதை ... 124
78. கலை ... 125
79. கானலங்கானல் ... 126
80. பீ முற்றம் ... 129
81. உருப்படி ... 131
82. பால் ... 132
83. வெளியே சமுத்திரம் ... 133
84. நாம் பிறப்போம் ... 135



* எப்படி இவர் போன்ற மிகச்சிறு வசதிகளை உடையவரால் நவீன தமிழ் இலக்கியத்தின் மீது ஆண்டுக்கணக்கில் மாறாத ஆர்வமும் கவனமும் வைத்திருக் முடியும் ? இதற்காகவே அவரை 'இலக்கிய யோகி' என்று அழைத்தேன்.

- அசோகமித்திரன்

* என் நண்பர்களில் மிகத் தனித் தன்மைகள் கொண்டவர் தஞ்சை ப்ரகாஷ்.

- வல்லிக்கண்ணன்

* ப்ரகாஷ் நல்ல ரசிகர் அவரது இலக்கிய ரசனை நளினமும் ஆழமும் கொண்டது.

- வண்ணநிலவன்

* கீதையில் "நான் காலமாய் இருக்கிறேன்" என்பான் கண்ணன். உண்மையில் மேதைகள் காலத்தின் கட்டுப்பாட்டில் இருப்ப தில்லை. அவர்கள் காலத்தை தன் வசம் வைத்திருக்கும் வலிமை பெற்றவர்கள். அவர்கள் அதில் ஏறி சவாரி செய்கிறார்கள் எம் ஆசான் போல.

- நா.விச்வநாதன்

* புத்தகம் பற்றிய அறிமுகத்தை ப்ரகாஷ் கூற கேட்க வேண்டும். இந்தப் புஸ்தகத்தி இவ்வளவு நுட்பமாக எழுதியிருக்கிறோமா என்ன ? என்று எழுதியவர்களே மலைத்துப் போவார்கள் .

- தஞ்சாவூர் கவிராயர்

* மீடியாக்கள் அவர் சாகித்யத்தின் அடர்த்திக்கும், வேகத்துக்கும் ஈடு கொடுக்க முடியாமல் மருண்டு மிரண்டன. கடைசி வரைச் சமரசம் செய்து கொள்ளாத எழுத்தாளராய் வாழ்ந்ததே அவரின் பலம். பலவீனமும் கூட.

- கீரனூர் ஜாகிர்ராஜா

* தஞ்சை ப்ரகாஷின் ஆளுமை இலக்கிய உலகின் மறைக்கப்பட்டு விட்டது என்றே சொல்லவேண்டும். நானறிந்து ஜி.நாகாராஜனைப்போலவே வாழ்ந்தவர் ப்ரகாஷ் அவருடைய கள்ளம் நாவலே அதற்கு சாட்சி.

- நா.முத்துகுமார்